விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 235 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 26 வெள்ளிக்கிழமை (11.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

903 பயணிகளுடன்


## காங்கேசன்துறையில் சுற்றுலா பயணிகள் கப்பல்




(யாழ்ப்பாணம்)
MV Empress என்ற சுற்றுலாப் பயணிகள் கப்பல் இன்று 903 பயணிகளுடன் காங் 15

## தமிழர்களின் பிரச்சினையை அறிவிக்க பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது

### அமைச்சர் டிரான் அலஸ்



(கொழும்பு)
வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினை தொடர்பிலும் அறிவிக்க பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்திற்கு அமைய, பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது தொடர்பில் தமிழ்ப் பாராளு 15

# பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குக

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் தமிழ் எம்.பிக்கள் வலியுறுத்து




*(கொழும்பு)*
*சர்வதேச நாடுகளைப் போல இலங்கையிலும் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என தமிழ் எம்.பிக்கள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் கோரியுள்ளனர்.*
*(15ஆம் பக்கம் பார்க்க)*

## வாயிலிருந்து இரத்தம் கசிவு

### குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)
வாயிலிருந்து இரத்தம் கசிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 15

## முல்லையில் மினி சூறாவளி



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று மாலை வேளையில் மின் 15

## அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டம்

### பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்; 20 பேர் கைது



(கொழும்பு)
அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அரசாங்கத்துக்கு எதிராக நேற்று முன்னெடுத்த எதிர்ப்பு பேரணியை கலைப்பதற்கு பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம்மேற்கொண்டனர்.

எதிர்ப்பு பேரணியில் ஈடுபட்ட 20 பேர் இதன்போது கைது செய்யப்பட்டனர்.

இலவசக் கல்வியை அழிக்கும் 16

யாழ்.ஆறுகால்மடத்தில்

## குழந்தை ஒன்றின் தலைப்பகுதி மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், ஆறுகால் மடம் பகுதியில் குழந்தையொன்றின் தலைப்பகுதி நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள வீட்டிற்கு பின்புறமாக குறித்த குழந்தையின் தலைப்பகுதி இனங்காணப்பட்டு பொலிஸாருக்கு அறி 15

## குளியலறைக்குள் விழுந்த நபர் மரணம்

### உடுப்பிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
குளியலறைக்குள் விழுந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் இமையாணன் மேற்கு, உடுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம்ஞானமூர்த்தி (வயது-62) என்பவரே உயிரிழந் 15

## குருந்தூர் பொங்கல் நிகழ்வை ஜனாதிபதி நிறுத்த வேண்டும்

### சரத் வீரசேகர வலியுறுத்து




(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு-குருந்தூர் மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இந்த நிகழ்வை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வலியுறுத்தியுள்ளார். 16

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் 13 ஆவது திருத்த உரைக்கு உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து நேற்று முன்தினம் ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டு பதிலளிக்க விரும்பவில்லை. உரிய நேரத்தில் பதில் வழங்குவேன். என தமிழ் தேசியக் கூட்டமைப்பின்பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் விசேட உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். 13ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும்; அதை நாம் புறக்கணிக்க முடியாது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் எமது உறுதியான நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்துக்குப் பின்னர் அவர் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்திலும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நாம் எழுதிய கடிதத்திலும் தெளிவாகத் தெரிவித்துள்ளோம் என அவர் கூறியுள்ளார். (ம-7)


# கரந்தன் இராமுப்பிள்ளையின் பரிசளிப்பு விழா இன்று

(நீர்வேலி)

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் 2023ம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2.30 மணியளவில் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் திருமதி. சாந்தினி வாகீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) திருமதி. பிரதீபா காயத்திரி ஜகபதி அவர்களும் சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவி, மருத்துவர் திருமதி. திலக்சி விதுசன் அவர்களும் கௌரவ விருந்தினராக இலங்கை தொலைத் தொடர்பு நிலைய தொழிநுட்ப அத்தியட்சகர் திரு. அருமைநாதன் விஜபநாத் அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-7)

# இலங்கை வந்தடைந்த சீன இராணுவக் கப்பல்



சீன மக்கள் விடுதலை இராணுவ கடற்படையின் போர்க்கப்பலான HAI YANG 24 HAO நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

கொழும்பை வந்தடைந்த 129 மீற்றர் நீளம் கொண்ட இந்த கப்பலில் 138 பேர் கொண்ட பணியாளர்கள் பணி புரிகின்றனர் மற்றும் கமாண்டர் ஜின் சின் தலைமை தாங்குகிறார்.

இதற்கிடையில், கப்பல் ஆகஸ்ட் 12 ஆம் திகதி நாட்டில் இருந்து புறப்பட உள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (ம-7)

# இரசாயனம் கலந்த 82 ஆயிரம் கிலோ கொத்தமல்லி நேற்று மீட்பு

கல்முனையில் இரசாயனம் கலந்த ஒரு தொகை கொத்தமல்லியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய திருக்கோயில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் அம்பாறை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரும் இணைந்து சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

தரமற்ற கொத்தமல்லிக்கு இரசாயனம் கலந்து விற்பனை செய்வதற்காக பொதி செய்து வைக்கப்பட்டிருந்த 82,000 கிலோகிராம் கொத்தமல்லியே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன், பொதி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட கருவிகள், இயந்திரம் உள்ளிட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை கல்முனை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# நல்லூர் திருவிழா காலங்களில் சைவ பண்பாட்டை பின்பற்றுங்கள்

## கலாநிதி ஆறு.திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவிழா காலங்களில் சைவ பண்பாட்டை பின்பற்றி நடந்துகொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லூர் ஆலயத் திருவிழா காலங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வரலாற்று பெருமை மிக்க தமிழர்களின் தலையாய திருக்கோவிலாகிய நல்லூர் கந்த சுவாமி கோவில் இம்மாதம் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 25 நாட்கள் சிறப்பு உற்சவம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் தலைமையில் யாழ். மாநகர சபை மண்டபத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதில் ஆலோசிக்கப்பட்டபடி, சகல மக்களும் நல்லூர் திருவிழாக் காலங்களில் காலம் காலமாக பின்பற்றுகின்ற ஒழுங்குக் கட்டுப்பாடுகளை பேண வேண்டும். குறிப்பாக, ஆலய வழிபாட்டுக்கு வருபவர்கள் வரலாற்றுப் பண்பாடுகளை பேணக்கூடிய வகையில் சைவ பாரம்பரியமான பண்பாட்டு உடைகளை அணிந்து தெய்வ வழிபாட்டுக்கு வருவதே சாலப்பெருத்தமாகும்.

ஆலய சுற்றாடலில் வேறு விடயங்களுக்கு இடமில்லாத வகையில் ஆத்மீகத்தை மட்டும் நேசிக்கின்ற வகையில் சகலரும் அதற்குரியவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

நல்லூர் மகோற்சவ காலம் எமது பண்பாட்டு அடையாளத்தை நிரூபிக்கின்ற காலம். எங்களுடைய அடுத்த தலைமுறையை ஆற்றுப்படுத்துகின்ற காலம். எனவே, கோவிலுக்கு வருபவர்கள் குடும்பம் குடும்பமாக வருகை தந்து பக்திபூர்வமாக வழிபாடு செய்து, கோவில் வீதியில் அமர்ந்து பிரார்த்தனை செய்து மகிழ்ச்சியாக இந்த 25 நாட்களையும் ஒரு தவ வாழ்வாக கருதி வழிபடுங்கள். வீண்வார்த்தைகள் பேசாமல், கோவில் வீதியை தெய்வீகத்துக்குரிய வீதியாக மாற்ற வேண்டிய கடமை பக்தர்களுக்குரியது.

எனவே, நல்லூர் உற்சவ காலத்திலே ஆடம்பரமாக ஆபரணங்கள் அணிந்து, நவநாகரிகமாக பக்தர்கள் வருவதை தவிர்த்து, எளிமையாக வழிபாட்டுக்குரிய தோற்றத்தில் வருகை தந்து, அமைதியாக வழிபாடு செய்வதை கருத்திற் கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

ஆலய வீதியில் வாகனங்களை செலுத்தாதீர்கள். அவை ஆயிரக் கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதட்சணம் செய்யும் வீதியாகும். என்ன பதவிநிலையை கொண்டவர்களாக இருந்தாலும், எத்தகைய உயர் நிலையை அடைந்தவர்களாக இருந்தாலும், நல்லூர் வீதியில் நடந்து வாருங்கள். இது மிக முக்கியமாகும்.

படித்தவர்கள் உயர் பதவியில் இருப்பவர்கள் முன்மாதிரியாக செயற்பட்டு, நல்லூர் அடியவர்கள் எல்லோரும் சமம் என்கிற தர்மத்தை அனைவரும் பேணுங்கள் என்று அன்பான வேண்டுதலை விடுக்கின்றேன் என்றார். (ம-7)

# ரஷ்ய தம்பதிகள் விபத்தில் படுகாயம்

இலங்கைக்கு சுற்றுலா வந்த ரஷ்ய தம்பதிகள் விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுகுருந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

ரஷ்ய தம்பதிகளை ஏற்றிச் சென்ற முச்சக்கர வண்டி வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மேலும் மூன்று முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மீது மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

வஸ்கடுவவில் உள்ள சுற்றுலா ஹோட்டலில் இருந்து ஹிக்கடுவை பகுதிக்கு சென்றுகொண்டிருந்த போதே இந்த சம்பவம் இடம்பெற்றது.

முச்சக்கரவண்டியின் சாரதிக்கு நித்திரை கலக்கம் ஏற்பட்டமையே விபத்துக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




எங்கள் வீட்டு இளவரசி
தில்லையம்பலம் சருபிகா

09.08.2023 அன்று வயம்ப பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 18ஆவது பட்டமளிப்பு விழாவில் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப துறையில் கல்வி கற்று இளம் கலை (Bachelor of Bio Systems Technology Hons) பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட செல்வி தில்லையம்பலம் சருபிகா அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சாதனை படைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
குடும்பத்தினர்
(C-7049)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானின் ஒத்துழைப்புடன் விவசாயம் மேம்படுத்தப்படும்

## ஜப்பான் தூதுவர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**ஜப்பானிய மக்களுடைய நிதிப்பங்களிப்புடன் இலங்கையின் விவசாயப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவோம் என இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுஹோஷி கிடேசி தெரிவித்துள்ளார்.**

நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் ஜப்பான் மக்கள் மற்றும் அரசாங்கத்தின் நிதி உதவியோடு ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்படி அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜப்பான் நாட்டின் உதவியுடன் மேலும் 8360 மெற்றிக்தொன் யூரியா உரம் இவ் வாரம் இலங்கையின் விவசாய அமைச்சிடம் கையளிக்கப்படவுள்ளது.

இலங்கையின் சிறு விவசாயிகளுக்கு ஜப்பான் நாட்டின் உதவியோடு உரம் வழங்குவதில் நான் மகிழ்வடைகிறேன்.

இலங்கை விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் மழை நீர் கிடைப்பதில்லை, வரட்சி, மழை வெள்ளம் போன்ற கால நிலை சார்ந்த பிரச்சனைகள் இருப்பதாக விவசாயிகளிடம் கேட்டுத் தெரிந்துகொண்டுள்ளேன். ஜப்பானிய மக்களின் உதவி இலங்கையின் விவசாயிகளுக்கு எக்காலத்திலும் தொடரும்.

கடந்த வருடம் ஜப்பான் இலங்கைக்கு நூறு மில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியுள்ளது.

இவ்வாறான உதவிகள் ஊடாக எதிர்காலத்தில் இலங்கையினுடைய விவசாயத் துறை வளர்ச்சியடையும் என நம்புகிறேன்.

இலங்கையில் நிலவிய யுத்த சூழலுக்குப் பின்னர் இலங்கையின் விவசாய துறையை மேம்படுத்துவதில் ஜப்பான்



துணை நிற்கும். தற்போது இலங்கையின் விவசாய துறை மேம்பட்டு வருகிறது.

ஜப்பான் மக்களுடைய உதவி மூலம் எதிர்காலத்தில் இலங்கையின் நெல் விளைச்சலை மேலும் அதிகரிக்க வேண்டும். இதனூடாக இலங்கையின் விவசாய பொருளாதாரம் மேம்பட்டு இலங்கைக்கான நெல் தேவையும் பூர்த்தியடையும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-5-30)

# அக்கராயனில் பொலிஸாரின் ஏற்பாட்டில் குடிநீர் விநியோகம்



(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் தற்போது நிலவுகின்ற குடிநீர் நெருக்கடியினை அடுத்து அக்கராயன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதீப் சுரங்க வீரப்தன ஏற்பாட்டில் தனியான குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு பொதுமக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் மத்தி, மேற்கு, கிழக்கு, கெங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் தற்போது குடிநீர் நெருக்கடி நிலவுகின்றது.

மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அக்கராயனில் நிலவுகின்ற குடிநீர் நெருக்கடிக்கு முழுமையான தீர்வு காணப்பட வேண்டும் என முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும் இதுவரை குடிநீர் நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு காணப்படவில்லை. இதன் காரணமாக பொதுமக்கள் குடிநீர் நெருக்கடியினை தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ள நிலையில் அக்கராயன் பொலிஸாரின் குடிநீர் ஏற்பாடு மக்களுக்கு ஆறுதலை வழங்கியுள்ளது. (4-5-350)

# வேலு பரியின் 'மௌனத்தீவு' நூல் வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

நூல் ஆசிரியர் வேலு பரியின் மௌனத்தீவு நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை 12 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்.பல்கலை வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணமும் விரிவுரையாளர் வை.ஈழலிங்கமும் வெளியீட்டுரையை H.N.B வங்கி பிராந்திய முகாமையாளர் ம.தயாகரனும் நயப்புரையை யாழ்.பல்கலை ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி. ம.திருவரங்கனும் நிகழ்த்தவுள்ளனர்.(4-5)

# வாகன தரிப்பிடம் அமைக்க பொதுமக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்கு அண்மித்த பகுதிகளில் வாகனத் தரிப்பிடம் இல்லாததனால் நீதிமன்றிற்கு வரும் பொதுமக்கள் மற்றும் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் A31 பிரதான வீதியில் இருப்பதனால் நீதிமன்றத்திற்கு முன்பாக அதிகமான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதனால் நீதிமன்ற தேவையின் நிமிர்த்தம் வரும் பொது மக்கள் வாகனங்களை வீதியின் இருமருங்குகளிலும் நிறுத்தி விட்டு செல்கின்றனர்.

இதனால், பயணிகளும் போக்குவரத்து மேற்கொள்வதில் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த பகுதியில் வாகன தரிப்பிடம் இல்லாததனால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய அதிக வாய்ப்புக்கள் இருப்பதனால் நீதிமன்றத்திற்கு முன்பாகவோ அல்லது அண்மித்த பகுதிகளிலோ வாகனத் தரிப்பிடம் ஒன்றினை அமைக்க உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து அதனை அமைத்துத் தருமாறும் நீதிமன்றிற்கு வரும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-299)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால நிகழ்வின் முக்கிய அங்கமாக நூற்றாண்டு நினைவிடத் திறப்பு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை காலை கலாசாலையின் அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம் பெற்றது.

# கால்நடைகளை கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது

(தருமபுரம்)



தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகேந்திரபுரம் பகுதியில் முறையான அனுமதிகள் இன்றி 20 கால்நடைகளை பாரவூர்தி ஒன்றில் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (4-5-316)

# சான்றுப் பொருட்களை பெற்றுக் கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்கு இலக்கம் AR/405/23.மற்றும் 51768 (B/1216/22) ஐ உடைய சான்றுப் பொருட்களான மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாத விடத்து 2 மாதங்களின் பின் எதுவிதமான முன் அறிவித்தல்கள் வழங்கப்படாது சான்றுப் பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-5)

# மன்னாரில் வாள்வெட்டு! பெண் உட்பட இருவர் படுகாயம்

## நால்வர் கைது

(மன்னார்)

மன்னாரில் இலுப்பக் கடவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூன்றாம்பிட்டி பகுதியில் இளைஞர் ஒருவரும் பெண்ணொருவரும் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதுடன், காயமடைந்தவர்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

பின்னர், காயமடைந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாலியாறு பகுதியைச் சேர்ந்த 50 வயதான பெண்ணும், 27 வயதான ஆணுமே சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தாக்குதல் தொடர்பில் பாலியாறு பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டி வலிகாமம் கல்வி வலயம் ஆதிக்கம்










நடைபெற்று முடிவடைந்த பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியில் வலிகாமம் கல்வி வலய பாடசாலைகள் முன்னிலை வகிக்கின்றன.

அந்தவகையில் 17 வய்துக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியனாக யா/மகாஜனக் கல்லூரியும் இரண்டாம் இடத்தை யா/ அருணோதய கல்லூரியும் மூன்றாம் இடத்தை யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியும் பெற்று கொண்டன.

தொடர்ந்து 20 வயதிற்கு உட்பட்ட பெண்கள் பிரிவு போட்டியில் சம்பியனாக யா/மகாஜனக் கல்லூரியும் மூன்றாம் இடத்தை யா/மானி ப்பாய் மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (4-105)

மாகாண மட்ட பளுதூக்கல் போட்டி

# பதக்க வேட்டை நடத்திய பண்டத்தரிப்பு பெண்கள் உ/த பாடசாலை



மாகாண ரீதியிலான பளுதூக்கல் போட்டிகள் நேற்றையதினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு 3 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் என்பன கிடைத்துள்ளன.

அந்தவகையில் 17 வயதுக்குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் 45kg பிரிவில் 60kg பளுவை தூக்கி வி.ஜஸ்மின் 3ஆம் இடத்தினையும் 55kg பிரிவில் 63kg பளுவை தூக்கி நி.நிறுக்சிகா 3 ஆம் இடத்தினையும் 59kg பிரிவில் 74kg பளுவை தூக்கி சி.யுஷாந்தி 1 ஆம் இடத்தினையும் 64kg பிரிவில் 87kg பளுவை தூக்கி ரா.லிசனா 1 ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

அதுபோல 20 வயதுக்குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் 49kg பிரிவில் 42kg பளுவை தூக்கி சூ.டிலக்சி 3 ஆம் இடத்தினையும் 55kg பிரிவில் 76kg பளுவை தூக்கி இ.றம்மியா 2 ஆம் இடத்தினையும் 71kg பிரிவில் 96kg பளுவை தூக்கி வி.ஜெஸ்மினா 1 ஆம் இடத்தினையும் 76kg பிரிவில் 66 kg பளுவை தூக்கி அ.சுஜாத்தா 2 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளார்கள்.

இவர்களுக்கான பயிற்சிகளை, பயிற்றுவிப்பாளர்களான பிரபாகரன் பிந்துஷா, கே.கஜேந்திரன் ஆகியோர் வழங்கினர். இந்த பாடசாலையானது கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தேசிய மட்டத்தில் நடைபெற்ற பாடசாலைக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் தங்கப் பதக்கம் உட்பட பல பதக்கங்களை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-104)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2887

பவி




வக்சன்




நிறோதிகா




கலைவாணி




கீர்த்திகன்




பிபிலானா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 வகையான மருந்துகளை பயன்பாட்டிலிருந்து நீக்க தீர்மானம்

## தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை

(கொழும்பு)

நாட்டிலுள்ள வைத்திய சாலைகளில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 5 வகையான மருந்துகளை பயன்பாட்டிலிருந்து நீக்குவதற்கு தேசிய ஔடத கட்டுப் பாட்டு அதிகார சபை தீர்மானி த்துள்ளது.

நாட்டிலுள்ள வைத்திய சாலைகளில் மருந்துகள் மற்றும் தடுப்பூசி கள் விஷமாவதால் ஏற்படும் மரணங்களின் எண் ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் தடுப்பூசி உள்ளிட்ட 5 வகையான மருந்துகளை பயன்பாட்டிலிருந்து நீக்குவதற்கு தேசிய ஔடத கட்டுப் பாட்டு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக Prepofol தடுப்பூசி, Bupivacaine, Amex ileve, Pedrizol one மற்றும் Cefrizone ஆகிய மருந்துகள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு ள்ளன.

மருந்துகளை கொள்வனவு செய்யும் அல்லது மருந்துகளை இறக்குமதி செய்யும் நடவடிக் கைகளில் தேசிய ஒழுங்குமுறை ஆணையம் தலையிடாது எனவும், மருந்து தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டால் குறித்த விடயத்தில் தாங்கள் தலையிடுவ தாகவும் தேசிய ஔடத கட்டுப் பாட்டு அதிகார சபை தெரிவித்து ள்ளது..

அதேநேரம், மருந்துகளை இறக்குமதி செய்யும் அரசாங்கம் அல்லது தனியார் நிறுவன ங்களால் மாத்திரமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று குறித்த அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் குறி ப்பிடப்பட்டுள்ளது. (நி-5)






# இராசிபலன்

11.08.2023
ஆடி 26, வெள்ளிக்கிழமை
தசமி முற்பகல் 8.57 மணிவரை
ரோகினி முற்பகல் 8.25 மணிவரை

சுபநேரம் -6.04-7.34 மணிவரை
இராகுகாலம்-10.34-12.04 மணிவரை

சந்திராஷ்டமம்-
விசாகம்.

வளவன்

**மேஷம்** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடு ம்பத் தேவைகள் எளி தில் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர் வம் காட்டுவீர்கள்.

**கடகம்** ஊக்கத்தோடும் உற் சாகத்தோடும் பணி புரிவீர்கள், அரசு வழியில் எதிர்பார் ப்புக்கள் நிறைவேறலாம், வருமானம் பெருகி வளம் காணும் நாள்.

**துலாம்** பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற் படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**மகரம்** வசதி வாய்ப்புக் களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர் கள், மறைமுகப் போட்டிகள் மாறும், பிள்ளை களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்** எந்தவொரு வேலை யையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** முன்னேற்றப் பாதை யில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறு துணையாக இருப்பர், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய் வீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** புண்ணிய காரியங்க ளுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**மிதுனம்** நண்பர்கள் தொடர் பான சில வேலைக ளுக்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி** பண வரவுகள் எளி தில் வசூலாகலாம், தேடிச் சென்றவர் கள் நாடி வந்து உதவுவர், தித்திக்கும் பயணங்கள் கைகூ டும் வாய்ப்புண்டு.

**தனுசு** காலை நேரத்தி லேயே கலகலப் பான செய்திகள் வந்து சேரலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், கௌரவமான நாள்.

**மீனம்** மகிழ்ச்சி தரும் செய்திகள் வீடு வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடை க்கலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வாலிபப் … நிதானமாய் கடந்து செல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

(யாழ்ப்பாணம்)


வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வழமை போல் நடைபெறவுள்ளது.

அதிகாலை விசேட அபிஷேகம், பூசை நடைபெற்று காலை 6.45 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் தீர்த்தவாரியும் நடைபெறும்.

காலை எட்டு மணிமுதல் பொதுமக்கள் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் பிதிர் தர்ப்பணங்கள் செய்து கொள்ள விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என ஆலய பரிபாலன சபை தலைவர் அறிவித்துள்ளார். (4-5)

### நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு

# கொடிச்சீலை வரைபவர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு





(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க அலங்கார நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் சோபகிருது வருட மஹோற்சவத்தினை முன்னிட்டு பந்தல்கால் நாட்டலும் காளாஞ்சி கொடுக்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் அலங்காரகந்தன், வள்ளி, தெய்வானைக்கு கிரியைகள் இடம்பெற்றன. அதனையடுத்து காளாஞ்சியானது மரபு ரீதியான செங்குந்தா பரம்பரையினருக்கு வழங்கப்பட்டது.

பின்னர் காலை 07.50 சுப நேரத்தில் ஆலய வெளிவீதி சுற்றுவட்ட பகுதியில் சம்பிர தாயபூர்வமாக ஆலய பிரதமகுருவினால் பந்தல்கால் நாட்டி வைக்கப்பட்டது.

மஹோற்சவ கொடிச்சீலையினை பரம்பரையாக வரைந்து கொடுப்பவர்களுக்கான காளாஞ்சியினை கையளிப்பதற்காக ஆலய உழவர் வண்டி மூலம் நல்லூர் பின்வீதியூடாக சென்று சட்டநாதர் வேல் முருகன் ஆலய நிர்வாகத்தினரிடம் ஆலய பிரதம குருக்களாகிய சிவஸ்ரீ வைகுந்தன், பிரசன்னா ஆகிய குருக்கள் தலைமையில் காளாஞ்சி மற்றும் மஹோற்சவ விஞ்ஞாபனம் கையளிக்கப்பட்டன. (4-5-33-104)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்திய திருமுறை மனனப் போட்டியின் பரிசளிப்பு விழா நிகழ்வு நாளை மறுதினம் 13 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4-5)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 13 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பாடசாலை அழகரட்ணம் மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-5)

# ஜப்பான் அரசின் நிதி உதவியில் வடக்கு விவசாயிகளுக்கு உரம்



(யாழ்ப்பாணம்)

ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) ஊடாக சிறு விவசாயிகளுக்கான உரமானியம் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று வியாழக் கிழமை சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெய்வநாயகி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுஹோசி கிடேனி மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறு விவசாயிகளுக்கான யூரியா உரப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

இதன்போது முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 25 விவசாயிகளுக்கான உரப் பொதிகளை பிரதம விருந்தினர்கள் வழங்கி வைத்தனர்.

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்பில் யாழ். மாவட்டத்திற்கு 25 கிலோகிராம் எடை கொண்ட 19,973 யூரியா உரப் பொதிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் சாவகச்சேரி கமநல சேவை நிலைய எல்லைக்குள் 2777 விவசாயிகளுக்கு 3774 யூரியா பொதிகள் வழங்கிவைக்கப்படவுள்ளன.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்திலும் நேற்று இடம் பெற்றது.

மேலும் குறித்த நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய தாபனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி விமலேந்திரசரன், சாவகச்சேரி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், உணவு மற்றும் விவசாய அமைப்பின் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-5-30-316)



ஜப்பான் மக்களின் நிதியனுசரணையுடன் ஜப்பானிய தூதுவராலயத்தினால் நேற்று மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு இரண்டு நோயாளர் காவு வண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் எச்.இ.மிசுகொசி மற்றும் அவரது தூதரக அதிகாரிகள் இணைந்து இதனை வழங்கிவைத்த நிலையில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையினரால் யாழ். இசைக்கருவி நினைவுச் சின்னமாக வழங்கப்பட்டு தூதுவர் கௌரவிக்கப்பட்டார். (படம்- கஜிந்தன், சிவசாந்தன்)


## ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டட திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/மாதகல் சென்.தோமஸ் றோ.க பெண்கள் பாடசாலை 143 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நாளை 12 ஆம் திகதி முதல் எதிர் வரும் 18 ஆம் திகதி வரை எழுச்சி வார செயற்பாடுகள் பாடசாலை அதிபர் திருமதி. ஜெ.பெ.றமணி தலைமையில் இடம்பெறவுள்ளதுடன் பாடசாலையில் புதிய கட்டட திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது. (4-5)



கோண்டாவில் தில்லையம்பதி மத்திய முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்று இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ஜானகி தர்மசீலன் கலந்து கொண்டார்.



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பறத்தின் பீடம் நேற்று காலை இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளின் பின்னர் முற்பகல் 10 மணியளவில் பக்தர்களினால் இழுக்கப்பட்டு ஆலயத்தின் சப்பற தரிப்பிடத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியாவுடன் கைகோர்க்கும் கிழக்கு மாகாணம்



(கொழும்பு)

கொரியா அரிசி உணவுப்பொருட்கள் சங்கத்தின் பிரதிநிதிக் குழுவிற்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் சௌமியபவானில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாணத்தில் அரிசி ஆலைகளை அமைப்பது தொடர்பில் கொரியா பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளதோடு இது உணவுப் பாதுகாப்பு திட்டத்திற்கு உதவியாகவும் விவசாயிகளுக்கு சிறந்த விற்பனை விலையின் மூலமாக வருமானம் ஈட்டக் கூடியதாகவும் அமையும்.

மேலும் மலையகத்திற்கு இதன் ஊடாக விநியோகத்தை ஆரம்பிப்பது குறித்தும் இதன் போது கலந்துரையாடப் பட்டன. (நி-5)

# பிரமிட் திட்டங்களில் ஈடுபடுவதை தவிருங்கள்

## மத்திய வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

பிரமிட் திட்டங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு இலங்கை மத்திய வங்கி, நாட்டு மக்களுக்கு மீண்டுமொரு அவசர அறிவிப்பை வழங்கியுள்ளது.

பிரமிட் திட்டங்களைச் செயற்படுத்தும் மோசடியாளர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

பிரபல விளையாட்டுக்கள், மதம் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்குவதன் மூலம் சமூகத்தில் இவர்கள் நல்லவர்களாக தோன்றுவதற்கு முயற்சிப்பதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் பிரமிட் திட்டங்களில் பங்கேற்பது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே இதில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

பிரமிட் திட்டங்கள் தொடர்பில் தொடர்ந்தும் மத்திய வங்கி மக்களுக்கு எச்சரிக்கைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பெயர்மாற்ற அறிவித்தல்

கட்டைக்காடு பெரியகுளம் கண்டாவளையைச் சேர்ந்த ஆறுமுகம் முருகையா ஆகிய நான் 11.08.2023 இன்று முதல் எனது பெயரை ஆறுமுகம் முருகானந்தம் எனப் பெயர்மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

**உண்மையுள்ள,**

(16674) **திரு.ஆறுமுகம் முருகானந்தம்.**

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 450 |
| தக்காளி | 200 | 250 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 240 | 200 | 250 |
| கோவா | 250 | 250 | 280 | 300 |
| கரட் | 360 | 480 | 500 | 550 |
| பூசணி | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 80 | 70 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 150 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 200 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 350 | 380 | 300 | 250 |
| வெண்டக்காய் | 80 | 80 | 60 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 170 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 120 | 80 | 150 |
| லீக்ஸ் | 250 | 200 | 250 | 250 |
| பீற்றூட் | 160 | 180 | 160 | 160 |
| கறிமிளகாய் | 350 | 400 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 250 | 200 |
| போஞ்சி | 450 | 400 | 420 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 300 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | 350 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 30 | 60 |
| ஈரப்பலா | 120 | 150 | 100 | 80 |

### யாழ்ப்பாணம் உட்பட

# இலங்கையின் பல இடங்களில் குடிநீர் விநியோகத்தில் சிக்கல்

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

(கொழும்பு)

தற்போது நிலவும் வரட்சியான வானிலை காரணமாக பல பகுதிகளில் நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட குருநாகல், அக்கரைப்பற்று, பண்டாரவளை ஆகிய பிரதேசங்களில் நீர் இருப்பு மிகவும் குறைவாகவே காணப்படுவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் குறித்த பகுதிகளுக்கு ஏற்ற விதத்தில் நீர் திறந்து விடப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.(நி-5)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 581/58, 581/59 ஆதனத்தின் ஆதனப் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த யோசியாம்பிள்ளை டொமினிக் அல்லது யோசியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் என்பவர் யாழ். நொத்தாரிசு அ.மரியாம்பிள்ளை என்பவர் முகதாவில் 1973.03.19 ஆம் திகதி 412 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சுண்டிக்குழி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை 'அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்' என்னும் பெயருடைய ஆதனத்தின் விஸ்தீரணம் நெற்பரப்பு ஆதனத்தை குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் கெலனுக்கும் அறுதி விற்றுள்ளார்.

குறித்த ஆதனம் குருநகர் மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த திருமதி றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என்பவர் நொத்தாரிசு அ.இராஜரட்ணம் என்பவர் முகதாவில் 2004.01.15 ஆம் திகதி 2015 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் சவிரிமுத்து கிறிஸ்தோபர் காலமாகிவிட்ட எனது பெற்றோருக்கு ஏக வாரிசாக எனக்கடைந்த உரித்தும் எனதாட்சியுமானது என வெளிப்படுத்தியுள்ளார். குறித்த ஆதனம் றிச்சேட் கான்ஸ்போவர் அற்றோணி திருமதி எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் என்பவர் நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் என்பவர் முகதாவில் 2014.10.27 ஆம் திகதி 2213 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியா என்பவர் நொத்தாரிசு தே.சுபாஜினி என்பவர் முகதாவில் 18.08.2015 ஆம் திகதி 176 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி குணசிங்கம் ஜெயராட் அமலதாசும் பெண் மேரி குளோரியா சுசிலாவிற்கு அறுதியாக விற்றுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை, **'அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்'** என்று வழங்கும் **'கொழும்புத்துறைத் தெருத்தோட்டம்'** நிலப்பரப்பு 375 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 12.03.2012 இல் 1 தொடக்கம் 10 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12 ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு 376 குளி 12.8 இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு 222 குளி 3.92 இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 05.12.2014 இல் 6088 A/14 ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி துண்டு 49 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 01 துண்டு 50 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 இவ்விரு துண்டுகளும் ஒன்று சேர்த்து நிலப்பரப்பு 2 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 21.12.2014 இல் வரைந்த முறையே 6088A-49/14 ஆம் இலக்கத்திலும் 6088 A 50/14 ஆம் இலக்கத்திலும் அளந்த நில அளவைப்படங்களில் முறையே துண்டு 1 (lot 1) என சுட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு இரண்டுக்கும் எல்லை.

கிழக்கு - குறித்த 6088A/14 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 48 என காட்டப்பட்ட ஆதனம்.

வடக்கு - குறித்த ஆதனம் 6088A/14 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 45 உம் துண்டு 46 உம் என காட்டப்பட்ட ஆதனங்கள்.

மேற்கு- குறித்த 6088A/14 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 51 என காட்டப்பட்ட ஆதனம்.

தெற்கு - ஆறு மீற்றர் அகலப்பாதை இதடங்கலும் இன்னும் இவ்வாதனத்திற்கு தெற்கே உள்ள ஆறு மீற்றர் அகலமுள்ள பாதையால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை குணசிங்கம் ஜெயராட் அமலதாசும் பெண் மேரி குளோரியா சுசிலா என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது. பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிபடுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குணசிங்கம் ஜெயராட் அமலதாசும் பெண் மேரி குளோரியா சுசிலா என்னும் பெருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-7046)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 177

# தாயுமானவன்



அவன் பிறந்திருந்தான். அவன் என் மகன். பிஞ்சுக் கால்கள் நோஞ்சானாக இருந்தன. முற்றாத மெல்லிய எலும்புகள் தோலால் போர்த்தப்பட்டிருந்தன. அசைக்கவும் தெம்பில்லாத தேகம். பாலுக்காக செவ்விதழ்கள் விரிய அழுது கொண்டிருந்தான்.சத்தம் வரவில்லை.

அவன் போதிய வளர்ச்சி அடையாத குழந்தைகளுடன் இருந்தான்.ஜீவ மரண போராட்டம்.

மனைவியைத் தேடினேன். "இதுதன் பிள்ளையே இல்லை" என்று வெறி கொண்டு உதறி விட்டுப் போயிருந்தாள்.

"குழந்தையை என்ன செய்வது? யாருக்காவது கொடுத்து விடவா?" என்று தலைமை மருத்துவர் வினாக்களுடன் என் கண்களுக்குள் ஊடுறுவினார்.

"இல்லை இந்த எலும்புகளும் தோலும் என் உயிரணுக்களின் பிரதிகள். எனக்கு இவன் வேண்டும்" என்றேன்.

"சற்றே சவாலான பணிதான்.

சாதித்துத் தான் பாருங்களேன்"

சாதாரண பிள்ளைகளைப் போல் வளர்க்கும் பணியில்லை.

கங்காரு தன் குட்டியை சுமப்பது போன்று என் மார்புடன் பிணைத்து விட்டார்கள். மூக்கிலும் கை கால்களிலும் ஏதேதோ குழாய்கள், பெயர் சொன்னார்கள், புரியவில்லை. இனிவரும் நாட்கள் சுமந்து வந்த கேள்விகளுக்கும் விடையில்லை.

கழிவறைக்கும் போகவே முடியாத நிலை.எப்படி தொழில் செய்வது? என்னோடு அவனையும் பராமரிக்க வேண்டியிருந்தது. உலகம் சிக்கலாய் தோன்றியது.

நகரத்தின் ஓர் எல்லையில் ஒரு எரிபொருள் நிரப்பும் நிலையத்தை ஒட்டியிருந்த சக்கரங்களுக்கு காற்று நிரப்பும் என் கடையை விற்று விடுவதென தீர்மானித்தேன். பணத்தை வைப்பிலிட்டு செலவுகளை சமாளித்தேன். வைத்தியர் என்ற நிலை கடந்து தோள் தந்ததெல்லாம் அவர் மட்டுமே.

என் சேமிப்பு கரைய என் மகன் செழித்துக் கொண்டிருந்தான். இப்போது கொஞ்சம் தெம்பாக அழச் செய்கிறான். லேசாக அசைகிறான்.போத்தலில் பாலருந்துகிறான்.மூன்று மாதங்களின் பின் வீடு திரும்பினேன். வீடென்றால் பலகைகளால் உருவாக்கப்பட்ட ஒரு அறை அவ்வளவே.

யாரோ தெரியாத ஒரு செவிலித் தாயிடம் மகனை கொடுக்க பிடிக்கவில்லை. இருபத்து நாலு மணியும் அவனை என் கண்களுள் காக்க எண்ணினேன்.

விநியோகஸ்தரிடமிருந்து பக்கத்து தெருவிலுள்ள வீடுகளுக்கு தண்ணீர்ப் போத்தல் சுமந்து செல்லும் பணி. குழந்தைக்கும் எனக்கும் சாப்பாடென்று ஏதோ வேண்டுமே. வயிற்றில் குழந்தையை பிணைத்தபடி பணி செய்தேன். இரவில் பக்கத்து கடைகளிற்காக காகிதப் பை ஒட்டிக் கொடுத்தேன்.

நாட்கள் நகர்ந்தன. அவன் வளர்ந்திருந்தான், "அம்மா" என்று என்னைத் தான் அழைத்தான்.

என் அணைப்பினில் ஆசுவாசப்பட்டான்.

என் விரல் பற்றி நடக்க ஆசைப்பட்டான். வளர்ந்தும் வளராத என் தாடியின் மயிர்க் கணுக்களில் தன் கன்னத்தை பதித்து சுகம் கண்டான்.

மனைவி திரும்பி வந்தாள்.

தன் தவறை உணர்ந்து,நொந்து மன்னிப்புக் கேட்டாள். இவனை தன் பிள்ளை என ஏற்றுக் கொண்டாள். என் மகனின் தாயை மன்னித்தேன். என் குடும்பத்தில் இன்னொரு நபராய் அவள் இணைந்தாள்.

ஏற்றுக்கொண்டோம். மனைவியிடம் அணைய மகன் தயங்கினான், சிணுங்கினான். ஒரு வருடத்தின் முன் அவன் செவிமடுத்த அவளின் இதயத் துடிப்பின் மொழி அந்தத் தயக்கங்களை மறைய வைத்தது. வாழ்க்கை வண்ணாங்களை பூசிக் கொண்டது. தெரிந்த ஒரு வாகனம் திருத்தும் கடையில் தொழில் தேடிக் கொண்டேன். மனைவி-மகன்-நான் என வாழ்க்கை இப்போது இன்னுமின்னும் அழகாய் இருக்கிறது.

# அதீத வெப்பநிலை காரணமாக அமெரிக்காவில் 147 பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அதிக வெப்பம் காரணமாக, அமெரிக்காவின் பல மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 147 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. எதிர்பார்த்ததை விட அதிக வெப்பத்தினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வானிலை திணைக்களம் தெரிவித்துள்ளது.



அதிக வெப்பத்தினால் அமெரிக்காவின் அரிசோனா, நெவாடா மற்றும் டெக்சாஸ் மாநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அரிசோனா மாநிலத்தில் அதிக வெப்பம் காரணமாக 103 பேர் உயிரிழந்துள்ளனர். நெவாடாவில் இறந்தவர்களின் எண்ணிக்கை 26 என்றும் டெக்சாஸ் மாகாணத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளதாகவும்கூறப்படுகின்றது.(நி-5)

# பாகிஸ்தான் பாராளுமன்றம் கலைப்பு பிரதமர் பரிந்துரையை ஏற்ற ஜனாதிபதி



(இஸ்லாமாபாத்)

பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி பிரதமர் ஷபாஸ் ஷெரீப் கடிதம் எழுதினார். அவரது பரிந்துரையை ஏற்று ஜனாதிபதி ஆரிப் ஆல்வி பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் பதவிக் காலம் வரும் 12 ஆம் திகதி நிறைவடைகிறது. பதவிக் காலம் முடியும் முன்பாகவே பாராளுமன்றம் கலைக்கப்படும் என பிரதமர் ஷபாஸ் ஷெரீப் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, பாராளுமன்றத்தைக் கலைக்கக் கோரி பிரதமர் ஷபாஸ் ஷெரீப் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதினார். இது தொடர்பாக அவர் கூறுகையில், பாராளுமன்றத்தை கலைக்கும்படி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளேன். பின்னர் இடைக்கால அரசாங்கம் பொறுப்பேற்கும் என தெரிவித்தார்.

இந்நிலையில், பிரதமர் ஷபாஸ் ஷெரீப்பின் பரிந்துரையை ஏற்று பாகிஸ்தான் பாராளுமன்றத்தை நேற்று முன்தினம் நள்ளிரவு கலைக்க ஜனாதிபதி ஆரிப் ஆல்வி உத்தரவிட்டுள்ளார்.பாராளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்பட்டதால் தேர்தல் நடத்த 90 நாட்கள் அவகாசம் வழங்கப்படுகிறது. (நி-5)

# பிரான்ஸில் பாரிய தீ விபத்து 11 பேர் உயிரிழப்பு

(பாரிஸ்)

பிரான்ஸில் விடுமுறை விடுதியொன்றில் ஏற்பட்ட பாரிய தீயினால் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜேர்மன் எல்லையிலிருந்து 70 கிலோமீற்றர் தூரத்திலுள்ள விண்ட்ஸென் ஹெய்ம் நகரில் நேற்று முன்தினம் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த விடுதிப் பகுதியே தீப்பற்றியுள்ளது.



சம்பவத்தில் 9 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலும் இருவரை காணவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் காணாமல் போனவர்களும் உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இத்தீ தற்போது அணைக்கப்பட்டு விட்ட நிலையில் தீ பரவியமைக்கான காரணம் வெளியாகவில்லை. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கு தயாராகும் வகையில் ஆயுத உற்பத்தியை அதிகரியுங்கள்

## வடகொரியா ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(பியாங்யாங்)

**போருக்கு தயாராகும் வகையில், தற்போதைய நவீன ஆயுதங்களை கொண்டு வடகொரியாவின் 75 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய அணிவகுப்பை நடத்த வடகொரிய ஜனாதிபதி கிம்ஜாங் உன் உத்தரவிட்டுள்ளார்.**



கொரிய தீபகற்பத்தில் எப்போதுமே அசாதாரண சூழ்நிலைதான் நிலவி வருகிறது என்றால் அது மிகையாகாது. அதற்கு முக்கிய காரணம் வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்துவது தான்.

வடகொரியாவிடம் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள தென்கொரியா அமெரிக்காவுடன் நெருக்கம் காட்டி வருகிறது. இது வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னிற்கு பிடிக்கவில்லை. இதனால் தென்கொரியாவை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், வடகொரியா ஆயுதங்கள் சப்ளை செய்வதாக அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது.

கடந்த மாதம் அமெரிக்காவின் அணுஆயுத நீர்மூழ்கி கப்பல் தென்கொரிய கடற்பகுதியில் காணப்பட்டது. இதற்கு வடகொரியா ஆட்சேபனை தெரிவித்தது.

எதிர்வரும் 21 மற்றும் 24 ஆம் திகதிகளுக்கிடையில் அமெரிக்காவுடன் இணைந்து இராணுவ பயிற்சியில் ஈடுபட இருப்பதாக தென்கொரியா தெரிவித்துள்ளது. இதை வடகொரியாவுக்கான அச்சுறுத்தல் என கிம் ஜாங் உன் பார்க்கிறார்.

இந்த நிலையில் வடகொரியாவின் இராணுவ தலைமை ஜெனரலை நீக்கியுள்ளார். அவருக்குப் பதிலாக ரி யோங் கில் என்பவரை இராணுவ தலைமை ஜெனரலாக நியமித்துள்ளார். இவர் பாதுகாப்பு மந்திரியாகவும் இருந்து வருகிறார்.

அந்த பதவியில் தொடர்ந்து நீடிப்பாரா? எனத் தெரியவில்லை. அதனோடு போருக்கு தயாராகும்படி அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார். அதற்கு ஏற்ப ஆயுத தயாரிப்பை அதிகரிக்கவும் வலியுறுத்தியுள்ளார். கடந்த வாரம் ஆயுத தொழிற் சாலைக்கு சென்றிருந்தார். அப்போது ஏவுகணை என்ஜின், பீரங்கி மற்றும் ஆயுதங்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய கேட்டுக் கொண்டார். (நி-5)

# ரஷ்யாவின் தொடர் ஏவுகணை தாக்குதலில் ஏழு பேர் உயிரிழப்பு பலர் மாயம்



(கீவ்)

கிழக்கு உக்ரைனின் போக்ரோவ்ஸ்க் நகரில் குடியிருப்பு கட்டடங்கள் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது இரண்டு ஏவுகணைகள் நகரத்தைத் தாக்கியுள்ளதுடன், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்த 30க்கும் மேற்பட்ட பொதுமக்களில் இரண்டு குழந்தைகளும் அடங்குவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# ஈரான் மீது மேலும் தடைகளை விதித்த கனடா அரசாங்கம்




(தெஹ்ரான்)

ஈரான் மீது மேலும் தடைகளை விதிப்பதாக கனேடிய மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஈரானிய பாதுகர்ப்பு பிரதானி உள்ளிட்ட சிலர் மீது இவ்வாறு கனடா தடை விதித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தியதாகவும் உக்ரைன் போர் தொடர்பிலும் ஈரான் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஈரானிய தேசிய பாதுகாப்புப் பேரவையின் பிரதானி அலி அக்பர் அஹமடின் மீது தடை விதிப்பதாக கனடா அறிவித்துள்ளது.

ஈரானிய ட்ரோன் துறை சார் சிலருக்கு எதிராகவும் இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலெனி ஜோலி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்தினால் இதுவரையில் 13 தடவைகள் ஈரானிய அதிகாரிகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை விதிக்கப்பட்டவர்கள் கனடாவிற்குள் பிரவேசிக்க முடியாது. மேலும் அவர்களது சொத்துக்கள் முடக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஈரானில் பொதுமக்கள் முன்னிலையில் ஐவருக்கு மரண தண்டனை

(தெஹ்றான்)

ஈரான் நாட்டில் பொது மக் கள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில்பட்டப் பகலில் 5 பேர் தூக்கிலிடப்பட்ட சம்பவம் மீண்டும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானில் நேற்று முன் தினம் 5 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு ள்ளது.கடந்த ஆண்டு ஈரான் வடமேற்கில் பெண்ணொரு வரை கடத்தி கூட்டு வன்புணர் வுக்கு இரையாக்கியதாக இவர் கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.மராண்ட் நகரில் இருந்து 2022 மே மாதம் தொடர்புடைய பெண் கடத்தப்பட்டு ள்ளார்.

குறித்த பெண்ணை இந்த ஐவரும் கூட்டு வன் புணர்வுக்கு இரையாக்கியுள்ளனர். சம்பவம் நடந்த 4 நாட்களுக்கு பின்னர் இந்த ஐவரும் கைதாகி யுள்ளனர். இவர்கள் ஐவரும் பல் வேறு குற்றங்களில் ஈடு பட்டு வந்தவர்கள் என்பதும் விசாரணையில் அம்பலமானது.

இந்த நிலையில், விசா ரணை முடிவடைந்ததை அடுத்து இவர்கள் 5 பேரு க்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் அதிகாரிகள் முன் னிலையில் நடுவீதியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கூட்டு வன் புணர்வு குற்றச்சாட்டில் ஆண்கள் மூவருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

2021 இல் நடந்த இச் சம்பவத்தில் விசாரணை முடிவ டைந்த நிலையில் கடந்த மாதம் அந்த மூவருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற் றப்பட்டுள்ளது.

இதனிடையே, சீனா வைப் போன்று அதிக எண்ணிக்கையிலான மரண தண்டனையை நிறைவேற் றிய நாடு ஈரான் என மனித உரிமைகள் அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.இதேவேளை, 2023 இல் மட்டும் இதுவரை 282 பேர்களுக்கு ஈரான் மரண தண்டனை நிறைவேற்றி யுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் வரையில் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனை எண் ணிக்கையை விட இது இருமடங்கு என தெரியவந்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# மூலிகை அழகுசாதனப் பொருட்கள்

இன்றைய உலகிலே அழகுசாதனப் பொருட்கள் மக்களிடையே பெரும் மோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ் அழகுசாதனப் பொருட்கள் என்பது இரசாயனப் பதார்த்தங்களின் சேர்க்கையாகும். இவை இயற்கை வளங்களிலிருந்தும் அல்லது இரசாயனப் பதார்த்தங்களிலிருந்தும் பெறப்படுகின்றன.

இயற்கை வளங்களிலிருந்து என்று சொல்லப்படுகின்ற போது இயற்கையாகக் கிடைக்கக்கூடிய மூலிகைகளிலிருந்து பெறப்படுகின்றன.

மற்றையது செயற்கையான முறை மூலம் இரசாயனப் பதார்த்தங்களைத் தொகுத்துப் பெறப்படுகின்றனவாகும். மேலும் இவ் அழகுசாதனப் பொருட்கள் மனித உடலுக்குப் பாவிப்பதன் மூலம் உடலிலுள்ள மாசுக்களை அகற்றவும் அழகுபடுத்தவும் கவர்ச்சிகரமானதாக மாற்றவும் தோற்றத்தை மாறுபடுத்திக் காட்டுவதற்காகவும்



உபயோகிப்பதோடு உடலின் தொழிற்பாட்டையும் உடலின் கட்டமைப்பையும் மாறாது பேணுகின்றன.

இவ்அழகுசாதனப் பொ ட்கள் இயற்கையாகப் பெறப்படும் வளங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும போது அவை மூலிகை அழகுசாதனப் பொருட்கள் என விசேடமாக அழைக்கப்படுகின்றது. அதிகளவிலான இயற்கை உள்ளீடுகளைக் கொண்டதாகக் காணப்படும். அதாவது இம் மூலிகை அழகுசாதனப் பொருட்கள் தாவரங்களில் காணப்படுகின்ற அதிகளவான தாவர இரசாயனக் கூறுகளால் தயாரிக்கப்படுகின்றன.

அத்தாவர இரசாயனக் கூறுகள் உடல் பௌதீகக் கட்டமைப்பில் தாக்கம் செலுத்துகின்றன. மேலும் உடலுக்கு அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்களையும் வழங்குகின்றன. இம் மூலிகை அழகுசாதனப் பொருட்கள் வெவ்வேறு வகைகளில் காணப்படுகின்றன. அவையாவன, Shampoo, Conditioner, facewash, Cream மற்றும் சவர்க்காரம் என்பனவாகும்.

இம்மூலிகை அழகுசாதனப் பொருட்கள் பல்வேறு வகையான அத்தியாவசியமான எண்ணெய்கள், தனின் (Tannin), அல்கலொயிட்டுக்கள் (alkaloids), புரதங்கள் ஆகியனவற்றைக் கொண்டிருக்கின்றன. இவை தோலின் உடற்தொழிற்பாடுகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அத்துடன் வளமான சருமம் அல்லது தலைமுடிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகின்றன.

அத்துடன் இம்மூலிகை அழகுச் சாதனங்கள் உடலின் கட்டமைப்புகளிலோ அல்லது தொழிற்பாடுகளிலோ பாதிப்பை ஏற்படுத்த மாட்டாதவை ஆகும்.

இம்மூலிகை அழகுசாதனங்களாகப் பயன்படுத்தக்கூடிய சில தாவரங்களைப் பார்ப்போம்.

1) கற்றாழை (Aloe vera)

அழகியல் துறையில் பெருமளவில் பயன்படுத்தக்கூடிய தாவரமாகும். நுண்ணங்கிகளுக்கு எதிரானதும் சருமத்திலுள்ள காயங்களை ஆற்றுப்படுத்துவதற்கும் முக்கியமான ஒரு தாவரமாகும். அத்துடன் கலங்கள் பாதிப்படைவதைத் தடுப்பதுடன் சருமம் மூப்படைவதைத் தாமதப்படுத்துகின்றது.

இதிலுள்ள புரதம், குளுக்கோசு, இலிப்பிட்டுக்கள் சருமம் சிதைவடைவதைத் தடுக்கின்றது. மேலும் இதிலுள்ள ஒட்சிசனேற்றிகள் சருமத்தில் நிறமாற்றத்தை ஏற்படுத்தும் அசாதரணமான நிற மாற்றத்தை தடுக்கின்றது. மற்றும் சருமத்தில் ஏற்படும் சுருக்கங்கள் அத்துடன் ஈரத்தன்மை அற்று வரண்டு போதல் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்துகின்றன.

2) வேம்பு (Azadiracta indica)

வேம்பிலிருந்து பெறப்படும்



அழகுசாதனப் பொருட்கள் சூரிய ஒளியால் ஏற்படும் தாக்கத்தைத் தடுக்கின்றது. இது பற்றீரியாக்கள், பங்கசுக்களுக்கு எதிராகத் தொழிற்படும். இது பல சருமத்திலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வைத் தருகின்றது.

3) துளசி (Ocimum sanctum)

இதிலிருந்து பெறப்படும் அழகுசாதனப் பொருட்கள் சருமத்திலுள்ள நச்சுப் பொருட்களை நீக்குகின்ற வலுவைக் கொண்டுள்ளது. இது சருமத்திலுள்ள கலங்களை தூய்மைப்படுத்துகின்றது. சருமத்திலுள்ள பருக்கள், முகப் பருக்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்துகின்றது. மற்றும் முடி உதிர்வு, பொடுகு போன்றவற்றையும் கட்டுப்படுத்துகின்றது.

4) மஞ்சள் (Curcuma longa)

இது நுண்ணங்கிகளுக்கு எதிராகத் தொழிற்படும் தன்மை கொண்டது. மேலும் சிரங்கு, முகப்பரு ஆகியவற்றிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் சருமம் மூப்படைதலைத் தாமதப்படுத்துகின்றது. அத்துடன் சரும மடிப்புகள் என்பவற்றையும் தடுக்கின்றது. இது சருமத்தின் நிறத்தை ஊக்குவிக்கின்றது.

5) கரட் (Daucus carota)

இது புரோவிற்றமின், பீற்றா கரட்டின் (Beta Carotene), விற்றமின் A மற்றும் விற்றமின் B யைக் கொண்டுள்ளது. இதனால் இது வெப்பத்தினால் ஏற்படும் விளைவுகளுக்கு எதிராகவும் சருமம் மூப்படைதலைத் தடுக்கின்றதாகவும் உள்ளது. சருமத்தில் சூரியனின் தாக்கத்தினால் ஏற்படும் விளைவைக் குறைக்கின்றது. சருமத்தின் சுருக்கங்களைக் குறைக்கின்றது. வரண்ட சருமம் ஏற்படுதலைத் தடுக்கின்றது. மேலும் சருமத்தை பளபளக்கவும் உதவுகின்றது.

6) ரோஜா (Rosa centifolia)

இது விற்றமின் C யை அதிகளவில் கொண்டுள்ளது. அத்துடன் வெப்பத்தினால் ஏற்படும் சருமப் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தரக்கூடியது. மேலும் இத்தாவர உற்பத்திகளாக ரோஜா எண்ணெய், ரோஜா சவர்க்காரம், வாசனைத் திரவியங்கள் என்பன அழகுசாதனப் பொருட்களாக விநியோகிக்கப்படுகின்றன. இது சருமம் மூப்படைதலைத் தடுக்க உதவுகின்றது.

மற்றும் சருமத்திற்கு இயற்கையான முறையில் ஈரப்பதன் அளிக்கின்றது. இதன்மூலம் வரண்ட சருமப் பிரச்சினையைத் தடுக்கின்றது.

இவற்றைவிட வேறும் பல தாவரங்கள் மூலிகை அழகுசாதனப் பொருட்களாகப் பாவிக்கப்படுகின்றன. வெவ்வேறு வகையான அழகுசாதனப் பொருட்கள் உடலின் வெவ்வேறு பாகங்களுக்குப் பாவிக்கப்படுகின்றது. முகம், கண், உதடு, தலைமுடி, நகம் போன்றவற்றிற்கு வெவ்வேறு அழகுசாதனப் பொருட்களே பாவிக்கப்படுகின்றன.

(மூலிகைப் பயணம் தொடரும்)

ஆக்கம்:-
செல்வி. கோலமுகி வேதநாயகன் & கலாநிதி (திருமதி) கௌரி ராஜ்குமார்
தாவரவியற்துறை,
விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிற்கு அதிகாரங்களை வழங்கினால் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா?

## அத்துரலிய ரத்னதேரர் கேள்வி

(கொழும்பு)

**வடக்கிற்கு அதிகாரங்களைக் கொடுப்பதால் மட்டும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


"தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய சூழல் 50 வீதம் தற்போது உள்ளது. எஞ்சிய 50 வீதம், நாட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்தால் கிடைத்து விடும்.

இதனைத் தான் ஜனாதிபதி முதலில் சிந்திக்க வேண்டும். வறுமையால் இன்று அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அதனைப் பற்றி சிந்திக்காது வடக்கிற்கு அதிகாரங்களைக் கொடுப்பதால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா?

13 ஐ கொடுத்தால் யுத்தம் முடிந்துவிடும் என்று அன்று கூறினீர்கள்.

தற்போது நீங்கள் செய்யும் செயற்பாடுகள், மீண்டும் நாட்டில் அமைதியின்மைக்குத்தான் வழிவகுக்கும்.



இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமெனில் முதலில் தேர்தலை நடத்துங்கள்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த மாதத்தின் முதல் 6 நாட்களில் சுமார் 30 ஆயிரத்து 303 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வாராந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கபட்டுள்ளது.

இதன்படி இந்தியாவில் இருந்து நான்காயிரத்து 608 பேரும் அமெரிக்காவில் இருந்து 4 ஆயிரத்து 254 சுற்றுலாப் பயணிகளும் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அத்துடன் சீனாவில் இருந்து 2 ஆயிரத்து 246 பேரும் பிரான்ஸில் இருந்து ஆயிரத்து 842 பேரும் ஜேர்மனியில் இருந்து ஆயி ரத்து 791 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற் றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# காணி அதிகாரம் வழங்கப்பட்டால் பௌத்த மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும்

## பாராளுமன்றில் சரத்வீரசேகர

(கொழும்பு)

பௌத்த மரபுரிமைகளுக்கு எதிர் மறையாக தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் செயற்படும் போது 13 ஆவது திருத்தம் பற்றி பேச நாங்கள் விரும்பவில்லை.

காணி அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும்.

மாகாண சபை முறைமை வெள்ளை யானை போன்றது. புதிய அரசியலமைப்புக்கே மக்களாணை உண்டு, ஆகவே மாகாண சபையை நீக்கி புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறேன் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக அதிகார பகிர்வு குறித்து ஜனாதிபதி விசேட உரையாற்றினார்.

நான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை பார்வையிட்டுள்ளேன்.

பௌத்த தொல்பொருள் மரபுரிமை வாய்ந்த வவுனியாவில் வெடுக்குநாறி பகுதியில் உள்ள பௌத்த மரபுரிமை சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவ லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

காணி அதிகாரம் வழங்காத போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மரபுரிமைகள் இவ்வாறு அழிக்கப்படும் போது காணி அதிகாரத்தை வழங்கினால்என்ன நேரிடும்என்பது கேள்விக்கிடமாகவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான பௌத்த மரபுரிமை சின்னங்கள் காணப்படுகின்றன. அடையாளப் படுத்தப் பட்டுள்ளன.

இதுவே எங்களின் உரிமை. இவை சிங்களவர் களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் சொந்தமானது.

பௌத்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு எதிர்மறையாக செயற்படும் அடிப்படைவாத தமிழ் அரசியல்வாதிகள் இருக்கும் வரை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றி பேசுவதற்கு நாங்கள் விரும்பவில்லை.

நாடு பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள போது தமிழ் தேசிய கூட்டமைப்பினரே அதிகார பகிர்வை கோருகிறார்கள்.

விடுதலை புலிகளின் ஆயுதமாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்படுகிறது. 30 வருடகால யுத்தத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியாததை தற்போது தட்டில் வைத்து வழங்க முயற்சிப்பது முறையற்றது என அவர் தெரிவித்தார். (நி-5)

# கொவிட் தடுப்பூசி எதுவும் கையிருப்பில் இல்லை-உபுல்

(கொழும்பு)

இலங்கையில் எந்த ஒரு கொவிட் தடுப்பூசியும் இல்லாமையினால் கடுமையான நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதனால் மேற்கத்தேய நாடுகளுக்கு செல்ல எதிர்பார்த்து காத்திருக்கும் இளைஞர்கள் தங்கள் பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வெளிநாடு செல்ல எதிர்பார்ப்பவர்கள் தினசரி கொவிட்டை தடுக்கும் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான இலத்திரனியல் சான்றிதழ்களை பெற வருகின்றார்கள்.

அவர்களில் அதிகமானோர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களாவர்.

மேற்கத்தேய நாடுகள் பல இன்னமும் தடுப்பூசி செலுத்திய சான்றிதழ்களை கேட்பதனால் வெளிநாடு செல்வதில் கடுமையான சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும். தற்போது மேற்கத்தேய நாடுகளில் புதிய மாறுபாடுகள் அச்சுறுத்த ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் தடுப்பூசி இல்லாத ஒரு நிலையில் இந்த மாறுபாடுகள் நாட்டிற்குள் நுழைவதற்கும் வாய்ப்புகள் உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# தொழு நோயாளர்களின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் தொழு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மத்திய தொழுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தப் பிரிவின் பிரதான வைத்திய அதிகாரி சனத் தீபக இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 127 தொழு நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# அரசியல் தீர்வு காணும் விடயத்தில் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது

## யாரும் காலை வாரக் கூடாது என்கிறார் மனோ எம்.பி

(கொழும்பு)

அரசியல் தீர்வு காணும் விடயத்தில் தற்போது மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதால் இந்த விடயத்தில் யாரும் காலை வாரிவிடக் கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மகிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் நிலைப்பாட்டில் உள்ளவர் என்று பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டபோது நாங்கள் உங்களை சந்தித்தபோது அதிகாரத்தை பரவலாக்கி அரசியல் பிரச்சினைக்குத் தீர்வினைக் காணுமாறு வலியுறுத்தினோம்.

ஆனால் அவர் செய்யவில்லை. இப்போது மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்த விடயத்தில் யாரும் காலை வாரிவிடக் கூடாது. இந்தப் பிரச்சினையை நாம் இப்போதே தீர்த்து விடுவோம்.



நாம் அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரத் தயாராகவுள்ளோம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 253





என் உயிரைக் கொடுப்பதின் மூலம் வீரபாண்டியனை உயிர்ப்பித்து அவளிடம் சேர்க்க முடியுமானால் அப்படியே நான் செய்திருப்பேன். இது முடியாத படியால் என்னை நானே நொந்து கொண்டேன். பார்த்திபா! நம்முடைய வல்லமைகளைப் பற்றி நாம் எவ்வளவோ நினைத்துக் கொள்கிறோம். நம்மால் ஆகாத காரியம் ஒன்றுமேயில்லை என்று கருதி இறுமாப்பு அடைகிறோம். 'அரசர்களிடம் மகா விஷ்ணுவின் அம்சம் இருக்கிறது' என்று ஒலைச் சுவடிகளில் எழுதி வைத்திருப்பதைக் கேட்டு விட்டு அதைக் கூட உண்மையென்று நம்பி விடுகிறோம். ஆனால் உடலை விட்டுப் பிரிந்து போன ஆவியைத் திரும்பக் கொண்டு வரும் வல்லமை நமக்கு உண்டா? அரச குலத்தில் பிறந்த யாருக்காவது இருந்திருக்கிறதா? நம்மால் உயிரை வாங்கத்தான் முடியும். ஆனால் உயிரைக் கொடுக்கும் சக்தி மனிதர்களாய்ப் பிறந்த யாருக்கும் இல்லை"

"அப்படி இல்லாமலிருப்பதே மிக நல்லது. அந்த வல்லமை தங்களுக்கு இருந்திருந்தால் எவ்வளவு தவறான காரியம் நடந்து போயிருக்கும்? பாண்டியனுக்கு மறுபடியும் உயிரைக் கொடுத்திருப்பீர்கள். அவன் மீண்டும் எங்கேயாவது மலைப் பொந்தில் போய் ஒளிந்திருப்பான். பாண்டிய நாட்டு யுத்தம் ஒருவேளை இன்னும் நடந்து கொண்டிருக்கும். இவ்வளவும் ஒரு பெண்ணின் பொய்க் கண்ணீருக்காக" என்றான் பார்த்திபேந்திரன்.

"பல்லவா! நீ பெண் குலத்தை வெறுக்கும் துர்ப்பாக்கியசாலி. காதல் என்றால் இன்னதென்று நீ அறிய மாட்டாய். அதனாலேயே இவ்விதம் பேசுகிறாய்."

"ஆம் நான் எந்தப் பெண்ணுடைய கண் வலையிலும் சிக்கியதில்லைதான். ஆனால் தங்கள் அந்தரங்கத்துக்குரிய நண்பன் வந்தியத்தேவன் மஞ்சள் பூசிய முகம் எதைக் கண்டாலும் மயங்கிப் பல்லை இளிப்பவன். ஆகையினாலேயே அவனைத் தங்களுக்கு என்னைக் காட்டிலும் பிடித்திருக்கிறது. இல்லையா, அரசே"

"ஆகா! கடைசியில் வந்தியத்தேவனிடம் வந்து விட்டாய் அல்லவா? ஏது, இத்தனை நேரம் அவனை மறந்து விட்டாயே என்று பார்த்தேன்"

"ஆம், அவனைப் பற்றி உண்மையைச் சொன்னால் தங்களுக்குக் கசப்பாகவே இருக்கும். அந்தப் பேச்சை விட்டு விடுகிறேன். பிறகு என்ன நடந்தது. அரசே! நந்தினியை மறுபடியும் தாங்கள் சந்திக்கவே இல்லையா? வீரபாண்டியனுக்காக உருகினவள் எப்படிக் கிழவர் பழுவேட்டரையரை மணந்தாள் என்று அவளைக் கேட்கவே இல்லையா?"

"வீரபாண்டியனைக் கொன்ற இரவில் வெற்றிக் கோலாகலங்களுக்குப் பிறகு நீங்கள் எல்லோரும் பாசறைகளில் படுத்துத் தூங்கினீர்கள். எனக்கோ தூக்கம் வரவேயில்லை. அவளை மறுபடியும் பார்க்க வேண்டும் என்று என் உடம்பிலுள்ள ஒவ்வொரு நரம்பும் துடித்தது. அவளைப் பார்த்து ஏதேனும் சமாதானம் சொல்ல வேண்டும். மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று விரும்பினேன். மற்றொரு சமயம் அவள் பேரில் எனக்குப் பொங்கி எழுந்த கோபத்தைக் கொட்ட வேண்டும் என்று ஆவேசம் உண்டாயிற்று. எப்படியாவது அவளைப் பார்த்தாலொழிய மனநிம்மதி ஏற்படாது. சோழ நாட்டுக்குத் திரும்பிப் போக முடியாது என்று தோன்றியது. ஆகையால் நள்ளிரவில் நீங்கள் யாரும் அறியாமல் பாசறையிலிருந்து புறப்பட்டுக் குதிரை ஏறிச் சென்றேன். வைகை நதியின் நடுவிலிருந்த தீவை அடைந்தேன். மனம் பதைபதைக்க, உடம்பெல்லாம் நடுங்க, கால்கள் தள்ளாட, குதிரையிலிருந்து இறங்கி, மெள்ள மெள்ள நடந்து பெருமாள் கோயிலுக்கு அருகில் சென்றேன். அங்கேயிருந்த குடிசைகள் எல்லாம் எரிந்து சாம்பலாகிக் கிடப்பதைக் கண்டேன். ஒரு வயோதிபரும் வயோதிப ஸ்திரீயும் எரிந்த குடிசைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வாயால் சிக்கிய வாண்டு மீன்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

"யாரோ இரண்டு மீனவர்கள் நாளைக்கு இங்க வந்து நம்மைப் பிடிக்கப் போறதா பேசிட்டு இருந்ததை வெச்சு நம்முடைய இந்த இடத்தை விட்டு நாம் ஓட முடியுமா? அவங்க நாளைக்கு இங்கு வராமல் கூட இருக்கலாம் இல்லையா?"ன்னு சொல்லிச்சு சமணன். தொடர்ந்து பேசியது "அவங்க நம்மைப் பிடிப்பதற்காக வந்தாலும் தப்பித்துக் கொள்ள என் கிட்ட ஆயிரம் வழிகள் இருக்குது." உன்னுடைய ஆயிரம் வழிகளும் தோற்றாலும் தப்பித்துக் கொள்ள மேலும் நூறு வழிகள் எனக்குத் தெரியுமே" என்றது சத்யன்.



"இரண்டு மீனவர்கள் நம்முடைய இடத்தைவிட்டு நம்மைத் துரத்த நாம அனுமதிக்கக் கூடாது." என்று மேலும் கூறியது.

அந்தக் குளத்திலுள்ள மற்றவை எல்லாம் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டன. "நல்லது. எனக்கு ஒர் உபாயம் மட்டுமே தெரியும். ஆபத்து வருவதற்கு முன்னால் அந்த இடத்தை விட்டு போக வேண்டும்"ன்னு சொன்ன குஜன் தன்னோட மனைவியோடு அந்தக் குளத்தை விட்டுப் பாதுகாப்பான இடத்தைத் தேடிச் சென்றது.

அவர்கள் போவதைக் கண்டு எல்லா மீன்களும் தவளைகளும் நண்டுகளும் ஏளனமாகச் சிரித்தன.

மறுநாள் அங்கு வந்த மீனவர்கள் பெரிய வலையைக் குளத்தில் வீசினார்கள். "ஓ கடிப்பதற்கு முடியாமல் இந்த வலை ரொம்ப தடியா இருக்குதே" என்று சோகத்தோடு சமணன் கத்தியது. என்னாலையும் இதிலிருந்து தப்ப முடியலையே. வலையை விட்டு வெளியில் வந்தால் தானே என்னால் எதையாவது செய்ய முடியும்?" என்று சத்யன் வருந்தியது.

குஜனின் அறிவுரையை நாம கேட்டிருக்க வேண்டும் என்று துயரத்தோடு கூறியது. மற்றொரு மீன். மீன்கள், நண்டுகள், தவளைகள் ஆகியவற்றைப் பிடித்த மீனவர்கள் அவற்றைப் பெரிய கூடையில் போட்டு எடுத்துச் சென்றனர்.

ஒரு பெரிய கல்லுக்குப் பின்னால் மறைந்து கொண்டிருந்த குஜன், அருகிலிருந்த தன் மனைவியிடம் "சரியான நேரத்தில் நாம அந்த முடிவை எடுத்திருக்காவிட்டால் மற்றவர்களோடு நாமும் இந் நேரம் அந்தக் கூடைக்குள் இருந்திருப்போம்." எனக் கூறியது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலேயே மிகப்பெரிய மனிதன் யார்? ஒரு வேர்க் கடலையை சாப்பிட்டுவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன். – *பாலக்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண ஆளுநர் கவனிக்காதது ஏன்?

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக இருந்த ஜீவன் தியாகராஜா பத்திரிகைகளை வாசிப்ப தில்லை என்ற ஐயம் பத்திரிகையாளர்களிடம் உண்டு.

வடக்கு மாகாணத்தில் ஆளுநராக இருந் தவர்களில் வினைத்திறன் குறைந்த ஒருவர் என்றால், அது அவராகவே இருக்க முடியும்.

இதுதவிர, இலங்கை நிர்வாக சேவை யில் அனுபவம்மிக்க தமிழ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கி அவர் செய்த திருக் கூத்து கொஞ்சமல்ல.

இதுதவிர கலர்ச்சாரம் அணிந்து தன்னை ஒரு சிங்களவராக அடையாளப்படுத்துவதில் அவர் காட்டிய ஆர்வத்தை எப்படிச் சொல்வது.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் புனரமைக் கப்பட்டு திறப்பு விழா நடந்தபோது விழாவுக்கு வந்த அவர் அணிந்திருந்த உடை தன்னை ஒரு சிங்கள இனத்தவராக அடையாளப் படுத்துவதாக இருந்தது.

எனினும் அவரின் பதவி அதிரடியாகப் பறிக்கப்பட்டதுதான் அவர் எதிர்பார்க்காத ஆச்சரியமான விடயம்.

சிலவேளைகளில் ஜீவன் தியாகராஜா ஒரு தமிழனாக இருந்தும் அந்த இனத்த வராகத் தன்னை அடையாளப்படுத்தாதபோது அவரை எப்படி நம்ப முடியும்.

நேர்மையானவர்கள் எப்போதும் எங்கும் நேர்மையாகவே நடந்து கொள்வர். மாறாக பச்சோந்திகளாக இருப்பவர்கள் சந்தர்ப்ப சூழ் நிலைகளுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள் வர் என்ற அடிப்படையில்கூட, அவரின் பதவி அதிரடியாகப் பறிக்கப்பட்டிருக்கலாம்.

எதுஎவ்வாறாயினும் இங்கு அவர் பற்றிப் பிரஸ்தாபிப்பது எமது நோக்கமல்ல.

மாறாக யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள் ஆரம்பமாகும் போதும் அவை நிறைவடையும்போது யாழ்ப் பாண நகர மத்தியிலும் யாழ்.நகரத்தில் இருந்து செல்கின்ற பிரதான வீதிகளிலும் காணப்படும் சன நெருக்கடியின் அவலம் சொல்லிமாளா.

ஆம், வாகன நெருசலால் திண்டாடும் வீதிகள் – குறுக்கு மறுக்குமாகச் செல்கின்ற வாகனங்கள், வீதியோரங்களில் நிறுத்தப் பட்டிருக்கும் மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் வர்த்தக நிலையங் களில் பொருட்களை ஏற்றுவதிலும் இறக்குவ திலும் ஈடுபட்டிருக்கும் கனரக வாகனங்கள் என எங்கும் ஒரே நெருக்கடி நிலை உள்ளது.

இருந்தும் போக்குவரத்துப் பொலிஸார் குறிப்பிட்ட நேரங்களிலேனும் போக்குவரத்தை வழிப்படுத்தும் கடமைகளில் ஈடுபடுவதில்லை.

இருந்தும் வடக்கு மாகாண ஆளுநர் இது பற்றிக் கவனித்தாரா? என்பதுதான் தெரிய வில்லை.

உண்மையில் வடக்கு மாகாண ஆளுநர், நாம் குறித்துரைத்த நேரங்களில் யாழ்ப் பாண நகரைச் சுற்றிப் பார்க்க வேண்டும்.

நகரப் போக்குவரத்து எவ்வாறாக இருக் கிறது என்பதை அவர் அவதானிக்க வேண்டும்.

அவ்வாறு அவதானித்தால், யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தி, வேம்படிச்சந்தி, சத்திரச் சந்தி என மூன்று சந்திகளில் வீதிச் சமிக்ஞை பொருத்தப்பட்டுள்ளதேயன்றி, வேறு எந்த இடத்திலும் வீதிச் சமிக்ஞையோ அல்லது பொலிஸாரின் வழிப்படுத்தலோ இல்லை என் பதைக் கண்டுகொள்ள முடியும்.

ஆகையால் வடக்கின் ஆளுநர் இது தொடர் பில் அதிரடியாக நடவடிக்கை எடுத்து யாழ்ப் பாண நகரத்தில் பொலிஸார் மூலமாக போக்கு வரத்து நெருக்கடியைச் சீர் செய்ய வேண்டும்.

# நாட்டின் வங்குரோத்து நிலை

## தற்போது முழுமையான கட்டுப்பாட்டிற்குள்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு) .

நாட்டின் வங்குரோத்து நிலை தற்போது முழுமை யான கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள இந்தோனேசிய தூதரகத் தில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற 56ஆவது "ஏசியன்" தின கொண்டா ட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க இதனைக் குறிப் பிட்டார்.

இந்த நிகழ்வில் உரை யாற்றிய ஜனாதிபதி, 'ஏசி யன்' அமைப்பில் நுழை வதற்கான முன்மொழிவு நிராகரிக்கப்பட்டதாகவும், அதன் அங்கத்துவம்கிடைக் காததால் அதற்கு மாற்றீ டாக, பிராந்திய பரந்த பொரு ளாதாரக் கூட்டிணைவில் இணைந்து முன்னோக் கிச் செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

56 வருடங்களுக்கு பின்னர் நாம் ஏசியன் அமைப்பில் இருக்கின் றோம். ஏசியன் அமைப் பில் அங்கம் வகிக்கும் நாடுகள் பலவும் தற்போது மேம்பாட்டை அடைந்துள் ளன.

எவ்வாறாயினும் வங்கு ரோத்து நிலையை தற் போது முழுமையாக எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளோம். தற்போது நாம் துரித கதியில் முன் னேற்றத்தை நோக்கி நக ரப்போகிறோம். அதன் போது ஏசியன் அமைப் பின் பயணத்தை முன்னு தாரணமாக கொள்வோம். ஏசியன் அமைப்புடன் மிக நெருக்கமாக செயற்பட வும் எதிர்பார்த்துள்ளோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள் ளார். அதுவே எனது அர சாங்கத்தின் கொள்கையா கும். ஏனைய அரசாங்கங்க ளின் கொள்கையும்அதுவா கவே இருக்கும் என நம்பு கிறேன்.

எம்மால்மீண்டும்திரும் பிச் செல்ல முடியாது. நாம் முன்னோக்கியே செல்ல வேண்டும். தற்போதைய சர்வதேச நிலைமை குறித் தும் நாம் அவதானம் செலுத்தி வருகிறோம். இந்து-பசுபிக் பிராந்தியத் தில் ஏசியன் அமைப் பின் எதிர்கால கண்ணோட்டத் துடன் நாம் உடன்படுகி றோம். அந்த நோக்கை முன்னெடுத்துச் செல்வதற் கும் அதற்கேற்ப முன்னோக் கிச் செல்வதற்கும் நாங்கள் முழு ஆதரவை வழங்குகி றோம்.

கடல்சார் மையம் என்ற வகையில் இந்தோனேசி யாவுக்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம். நாம் அதிலிருந்து விலகிச் செல் லவில்லை. இந்த நெருக் கடிகளை முறியடிக்க நாம் ஒன்றிணைந்து முன்னோக் கிச் செல்வோம். ஏசியன் அமைப்பின் நோக்கானது, இந்து சமுத்திர பிராந்தி யத்தை ஒரு முனையாக வும், பசுபிக் சமுத்திர பிராந் தியத்தை மறுமுனையா கவும் அடையாளப்படுத்தி யுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப் பிட்டுள்ளார். (ம-7)

## இலங்கை சரியான பாதையில் செல்வதால் முதலீடு மேற்கொள்ள இதுவே தருணம்

### நிதி இராஜாங்க அமைச்சர்

இலங்கை சரியான பாதையில் சென்று கொண் டிருப்பதாகவும், நாட்டில் முதலீடு செய்வதற்கு இதுவே சிறந்த தருணம் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரி வித்துள்ளார்.

கடன் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சியை அடை வதற்கு அரசாங்கம் சீர் திருத்தங்களை மேற் கொண்டு வருவதாகவும், எனவே முதலீட்டாளர்கள் இலங்கை சந்தையைப் பயன்படுத்திக் கொள்ளு மாறும் அமைச்சர் குறிப் பிட்டுள்ளார்.

இந்தியாவின் சென்னை யில் நடைபெற்ற "இன் வெஸ்ட் ஸ்ரீ லங்கா" மன் றத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இத னைத் தெரிவித்தார்.

முதலீட்டு வாய்ப்பு களை வெளிப்படுத்துவ தன் மூலம் இலங்கை பங்குச் சந்தையில் வெளி நாட்டு போர்ட்ஃபோலியோ முதலீட்டை ஊக்குவிப்ப தற்காக பங்குதாரர்களு டன் இணைந்து கொழும்பு பங்குச் சந்தை (CSE) இந்த ஏற்பாட்டைச் செய்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை கட்டமைப்பு பல வீனங்களை நிவர்த்தி செய்யும் வகையில் ஆழ மான பொருளாதார சீர் திருத்தங்களை மேற் கொண்டு இலங்கை பலப் படுத்தப்படும்.

பொருளாதார ஸ்திர மின்மைக்கான முக்கிய காரணங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு தேவையான சீர்திருத் தங்கள் நிறைவடைந்துள் ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஊழல் தடுப்புச் சட்டம், பாராளுமன்ற பட்ஜெட் அலுவலகம், புதிய மத்திய வங்கிச் சட்டம் போன்ற சட்டங்களை அறிமுகப்ப டுத்தி, நிதி நிர்வாகத்தில் தேவையான சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற் றும் நல்லாட்சி ஏற்க னவே ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மேலும்தெரிவித்தார். (ம-7)

## சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### இன்றைய தினம் தீர்மானம்

சுகாதார அமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வரும் நம்பிக் கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் குறித்து இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற விவகாரக் குழுக் கூட்டத்தில் தீர்மா னம் எடுக்கப்படவுள்ளது.

இந்தக் குழு இன்று காலை 10.30 மணிக்கு கூடவுள்ளதாக பாராளு மன்ற வட்டாரங்கள் தெரி வித்தன.

இதன்படி, முன்னைய நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் வழமை போன்று இந்த வாரமும் பாராளுமன்ற நடவடிக்கைகள் நடைபெற வுள்ளன.

சுகாதார அமைச்சருக்கு கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரே ரணையை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க நேற்று முன்தி னம் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** 55 ஆம் பிரிவு இராணுவ முகாம் கட்டைக்காடு, தாளையடி ஐஸ் தொழிற்சாலை, கற் கோவலம் ஐஸ் தொழிற்சாலை, J.K.W.S.S.P. Site Office தாளையடி, 3 ஆவது குறுக்குத் தெரு, ஆழியவளை சுண்டிக்குளம் இயற்கை பூங்கா, கட்டைகாடு, கட்டைகாடு இராணுவ முகாம் (55ம் பிரிவு), கற்கோவளம், கேவில் முள்ளியான், பருத்தித்துறை வெளிச்சவீடு, மருதங் கேணி (தாளையடி), மாத்தனை, நாவலடி சந்தி மருதங்கேணி, நெல்லண்டை வல்லிபுரம் கோவில் பருத்தித்துறை வீதி, புனிதநகர், சிவபிரகாசம், உடுத் துறை, வத்திராயன், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக் கேணி முள்ளியன் இராணுவ முகாம், முள்ளியன், வெற்றிலைக்கேணி கடற்படை முகாம் ஆகிய இடங் களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மறக்கறம்பளை - கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

### பேராதனை பல்கலையில்

## போலி ஆவணங்கள் தயாரித்து 70 இலட்சம் ரூபாய் மோசடி

பேராதனை பல்கலைக் கழக கலைப் பீடத்தில் பணியாற்றியபோது உயி ரிழந்த பேராசிரியை ஒரு வருக்கு சொந்தமான சுமார் 70 இலட்சம் ரூபாய் பணத்தை போலி ஆவ ணங்களைத் தயாரித்து பல்கலைக்கழகத்தில் பணி புரியும் அவரது கணவ ருக்கு வழங்கிய சம்பவம் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை கணக்காய் வாளர் நாயகம்பேராதனை பல்கலைக் கழக நிர்வா கத்தை கோப் குழுவின் முன் அழைத்தபோது இது தெரிய வந்ததாகக் கூறப் படுகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு



03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அன்றைய காலகட்டத்தில் நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க தலைமையிலான நிதி அமைச்சின் நடைமுறைகள் உட்பட சில நடைமுறைகள் உலகளாவிய ரீதியில் வெறுப்பை ஏற்படுத்தின. உதாரணமாக மத்திய வங்கி பிணைமுறி மோசடி (bond scandal) என்று குறிப்பிடப்படும் இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி ஊழல் என்பது 27 பெப்ரவரி 2015 அன்று நடந்த ஒரு நிதிச் சலவை மோசடியாகும். இது இலங்கைக்கு 11 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் இலங்கை மீது வெளிநாடுகளின் வெறுப்பையும் ஏற்படுத்தியது.

அடுத்தது தேர்தலில் வெற்றி பெறுவது தொடர்பான பொருளாதார முடிவுகள், அதாவது இலவசங்கள், சலுகை அடிப்படையிலான அதிகபடியான விநியோகம் போன்றவை பொருளாதார நிலையை மேலும் சிக்கலாக்கின. இதைவிட 2018 இல் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு பொருளாதாரக் கண்ணோட்டத்தை மேலும் மோசமாக்கியது.

இவ்வாறான நெருக்கடியினால் அந்த நேரத்தில் அரசாங்கம் IMF ஆதரவு திட்டத்தின் கீழ் நிதி பண ஒருங்கிணைப்பில் (fiscal monetary consolidation) பல சீர்திருத்தங்களை செய்து பணவீக்கத்தை கட்டுப்படுத்தியது. இந்த சீர்திருத்தங்களில் எரிபொருள் விலை சூத்திரமும் அடங்கும். இது அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் நிதி அபாயங்களைக் கணிசமாகக் குறைத்தது. மேலும் பொருள் (சேவை) சேர் வரி (VAT) விகிதத்தை 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தியதும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த ஒரு காரணமாக அமைந்தது. ஆனால் 2019 தேர்தலுக்குப் பிறகு இச்சீர்திருத்தங்கள் புதிய அரசாங்கத்தால் தலைகீழாக மாற்றப்பட்டன.

2019 இற்கு முன்பிருந்த அரசாங்கம் 2019 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கி சட்டமூலத்தையும் உருவாக்கி மத்திய வங்கியை அரசியல் செல்வாக்கிலிருந்து சுதந்திரமாக மாற்றும் வகையில் திறைசேரிச் செயலாளரையும் அரசாங்கத்தின் எந்தவொரு உறுப்பினரையும் நாணயச் சபையின் உறுப்பினர்களாக ஆவதைத் தடை செய்தது.

இம்மசோதா பணம் அச்சிடுவதும் தடை செய்யப்பட வேண்டும். மத்திய வங்கியானது முதன்மைச் சந்தையில் (primary market) அரசாங்கத்தால் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான எந்தவொரு நிறுவனத்தினாலும் அல்லது வேறு எந்த பொதுநிறுவனத்தினாலும் வழங்கப்படும் பத்திரங்களை (securities) வாங்கக்கூடாது என்று கூறுகின்றது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் சுதந்திர மத்திய வங்கித் திட்டத்தை எதிர்த்து சட்டமூலத்தை நிராகரித்தது.

பல வல்லுநர்கள் லெபனானின் பொருளாதார நிலைமையை இலங்கையுடன் ஒப்பிட்டு இலங்கையும் அதன் இறையாண்மைப் பத்திரங்களைத் திருப்பிச் செலுத்தாத பாதையில் இருப்பதாக எச்சரித்திருந்தனர். இரு நாடுகளுக்கும் ஒரே மாதிரியான பிரச்சினைகள் இருக்கின்றன. உள்நாட்டுப் போர்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து அவர்களின் அடுத்தடுத்த அரசாங்கங்கள் தாங்க முடியாத கடன்களை குவித்த பின்னர் ஏற்பட்ட ஆழமான பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கின்றன.

இவ்வாறு தற்போதைய பொருளாதார நெருக்கடி பற்றி இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநரான டபிள்யூ.ஏ. விஜேவர்தன கூறியிருந்தார்.

குறிப்பு- மத்திய வங்கி சட்டமூலம் தற்போது (2023.07.20) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மத்திய வங்கி சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மத்திய வங்கியின் ஆளுநரை ஜனாதிபதியால் தனித்து நியமிக்க முடியாது. பாராளுமன்றத்தின் அரசியலமைப்பு பேரவை ஊடாகவே ஆளுநர் நியமிக்கப்பட வேண்டும். மறுபுறம் மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகள் நியமனம் பாராளுமன்றத்தின் ஊடாக நியமிக்கப்பட வேண்டும்.

மத்திய வங்கியின் உயர் பதவிகளை பாராளுமன்றமே தீர்மானிக்கும். ஆகவே மத்திய வங்கியின் சுயாதீன தன்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அரசியல் தலையீடுகள் இல்லாமல் சிறந்த முறையில் செயற்படும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2018 இல் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு பற்றி.....**

2018 இல் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு என்பது 2018 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணில் அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரச் செய்தார். அதனை ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடித்தது. இதற்குப் பிறகு இருவருக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றின. இதனால்தான் வேறு வழியின்றி தன் முன்னாள் எதிரி மகிந்த ராஜபக்ஷவுடன் கைகோர்க்க மைத்திரிபால முடிவு செய்தார்.

இலங்கையில் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன 2018 அக்டோபர் 26 அன்று இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்கி முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததை அடுத்து அரசியல் கொந்தளிப்பு ஆரம்பமானது. இதனை அடுத்து நாட்டில் இரண்டு பிரதமர்கள் உள்ள நிலை ஏற்பட்டது. ரணில் விக்கிரமசிங்க இந்த நியமனம் சட்ட விரோதமானது எனக் கூறி பதவி விலக மறுத்து விட்டார்.

அரசுத்தலைவரின் இந்தத் திடீர் முடிவு பெரும் அரசியல் கொந்தளிப்பை நாட்டில் ஏற்படுத்தியதோடல்லாது, பன்னாட்டு சமூகத்தின் விமர்சனத்துக்கும் உள்ளானது. ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள், மற்றும் எதிர்க்கட்சிகள் ராஜபக்ஷவின் நியமனத்தை இலங்கை அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறி ஏற்றுக் கொள்ளவில்லை. தனக்கே பாராளுமன்றத்தில் பெரும்பான்மையின் ஆதரவு உள்ளதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்து பாராளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவைக் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு இணங்காத சிறிசேன அக்டோபர் 27 அன்று பாராளுமன்ற அமர்வுகளை நவம்பர் 16 வரை ஒத்தி வைத்தார். ராஜபக்ஷ பிரதமராகத் தேவையான அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாததால் சிறிசேன சிறப்பு வர்த்தமானி மூலம் நவம்பர் 9 அன்று பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய எதிர்க்கட்சிகள் மற்றும் சமூக நிறுவனங்களும் இதனை அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து 2018 டிசெம்பர் வரை இடைக்காலத் தடையைப் பெற்றன. அதன்பின் இலங்கை உயர் நீதிமன்றமானது பாராளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த முடிவு அரசியலமைப்பிற்கு முரணானது என்று தீர்ப்பளித்தது. பிரதம நீதியரசர் நளின் பெரேரா, நாட்டின் உயர்நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகளின் ஏகமனதான முடிவை அறிவித்து பாராளுமன்றத்தை மீண்டும் இயங்கச் செய்தனர்.

**2019 ஆம் ஆண்டுக்குப் பின் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி**

2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 2020 பாராளுமன்றத் தேர்தலிலும் அவர் சார்ந்த கட்சி வெற்றியை ஈட்டி ஆட்சியை முழுமையாகக் கைப்பற்றியது. அதைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அவ்அரசாங்கம், தொடர்ச்சியாக அடுக்கடுக்கான கொள்கைப் பிழைகளை மேற்கொண்டது. இதன் விளைவாக இலங்கைக்குப் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. (2019க்குப் பின் அரச கடன் மற்றும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் எவ்வாறு அதிகரித்துச் சென்றதென்பதை படம் -அ வில் பார்த்து விளங்கிக் கொள்ளலாம்)

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் அதன் பொருளாதாரக் கொள்கையில் செய்த தவறுகளில் ஒன்று வருவாய் மற்றும் நிதிக் கொள்கைகளில் பெரும் வரிக் குறைப்புகளைச் செய்தது. வரி குறைப்பு காரணமா பட்ஜெட் பற்றாக்குறையானது 2020 இல் 5% இல் இருந்த நிலையில் 2022 இல் 15% ஆக உயர்ந்தது. மேலும் மோசமான நிதிக் கொள்கைகளை அமுல்படுத்தியதும் இலங்கைக்கு ஒரு பேரழிவு நிலைமையை ஏற்படுத்தியது. நீண்டகால திட்டமிடலுக்குப் பதிலாக தற்காலிக தீர்வுகள் மற்றும் குறுகிய கால திட்டமிடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த அரசியல்வாதிகளின் தொலைநோக்கு பார்வையின்மையினால் இலங்கை இத்தகைய அழிவுகரமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தை ஒன்...

விக்கப்பட்டது.

சிசுவின் தலைப்பகுதி மீட்கப்பட்ட பகுதிக்கு அண்மையில் கோம்பயன் மணல் இந்து மயானம் உள்ள நிலையில் மயானத்தில் இருந்து குறித்த உடல் பகுதிகள் இங்கு கொண்டு வரப்பட்டு இருக்குமா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## குளியலறைக்குள்...

துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்று விட்டு மீண்டும் திரும்பி வந்த சமயம் வீட்டில் அவரைக் காணாத நிலையில் தேடிய போது குளியலறைக்குள் விழுந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

அவரை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக் வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டார்.

இரத்த ஊட்டக் குறைபாட்டால் ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக மரணம் சம்பவித்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## முல்லையில்...

னல், காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடும் காற்றும் மின்னல் தாக்கமும் இடம்பெற்றுள்ளது. இதனால் தற்காலிக வீடுகளில் வசித்தவர்கள் பாதிப்பினை எதிர்கொண்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட மானுருவி கிராமத்தில் மின்னல் தாக்கம் ஒன்று பதிவாகியுள்ளது.

மானுருவி கிராமத்தில் வசிக்கும் நாதன் என்ற விவசாயியின் காணியில் உள்ள தென்னை மரத்தில் மின்னல் தாக்கியுள்ளதுடன் மின்னல் தாக்கத்தினால் வீட்டில் உழவு இயந்திரத்தின் கொட்டகை உடைந்து வீழ்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வீட்டில் பயன்தரு மரங்கள் சில மின்னல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (ம-7)

## வாயிலிருந்து...

அறிவாலயம், இமையாணன் மேற்கைச்சேர்ந்த இராசா சிவபாதம்(வயது- 48) என்பவரே உயிரிழந்தவராவார்.

அவர் கடந்த ஐந்தாம் திகதி அதிகாலை படுக்கையிலேயே வாயிலிருந்து குருதி வெளியேறிய நிலையில் காணப்பட்டதையடுத்து உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று வியாழக்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (ம-7,60)

## பொலிஸ்...

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தமிழ் எம்.பிக்களுக்கும் டிரான் அலஸிற்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் இரா. சாணக்கியன் ஆகியோர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது இந்தியா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளில் பொலிஸ் அதிகாரங்கள் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக தமிழ் எம்.பிக்கள் அமைச்சர் டிரான் அலஸுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்காததன் காரணமாக வடக்கில் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாதிருப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச நாடுகளில் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு சட்டம் நடை முறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இலங்கையிலும் குறித்த சட்டம் திருத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென தமிழ் எம்.பிக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், இந்தியா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளில் உள்ள அரசியல் கலாசாரங்கள் இலங்கையில் இல்லையென இந்த சந்திப்பின் போது டிரான் அலஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு தமிழ் எம்.பிக்கள் கோருவதற்கான காரணத்தையும் இந்தச் சந்திப்பின்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கேட்டறிந்து கொண்டுள்ளார். (ம-7)

## தமிழர்களின்...

மன்ற உறுப்பினர்களுக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கும் இடையே சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினையை அறிவிக்ககூடிய வகையில், பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட் டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இதன் போது சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினை தொடர்பிலும் குறித்த பொலிஸ் குழுவுக்கு அறிவிக்க முடியும் எனவும் அவர், குறிப்பிட்டுள்ளார்.

13ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதன் அவசியத்தன்மை தொடர்பில், இந்த சந்திப்பின் போது, அமைச்சர் டிரான் அலஸ், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேள்வி எழுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, கருத்துரைத்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 13ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி ஆளுநர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை குறைக்க முடியும் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட அதிகாரப்பகிர்வு தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவதாகவும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## காங்கேசன்துறை...

கேசன்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக காங்கேசன்துறை துறைமுக நிர்வாகம் அறிவித்துள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

மெகா பவர்
திகதி 10/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1550
I 18 19 48 55 76
Double Chance 78935

தன நிதானய
திகதி - 2023.08.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1232
D 11 14 23 40 D
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 13745

Lucky 7
திகதி 10.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0028
L7 இலக்கம் 2 1
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 4 0 7 0 3 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3444
சீட்டிழுப்பு திகதி 10.08.2023
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 06 39 50 61
M 61264
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.10
சீட்டிழுப்பு இலக்கம் 511
மீனம் 34 43 49 59 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/08/10
சீட்டிழுப்பு இலக்கம் 5202
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
Q 0 4 2 4 0 6
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 1999
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.08.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,008,928/-
வெற்றி இலக்கங்கள் 41 47 52 63 O
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 05 17 54 61 Q
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2176 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.08.10 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 26 40 56 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,231,620.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 17 33 42 57 Y
DLB

சனிதா
திகதி 2023.08.10 வெற்றி வாரம் 4337 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 14 23 40 41 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,824,376.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 05 51 55 58 U
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3888 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.10 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 11 43 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,196,588/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 02 31 34 40
DLB

கப்ருக
திகதி 10.08.2023 வெற்றி வாரம் 1352
A 27 37 48 58 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.426,639,694.20
கப்ருக "இரண்டாவது வாய்ப்பு" வெற்றி இலக்கங்கள் 17 23 26 31 V
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


சங்வர்தன வாசனாவ அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 618 திகதி 10-08-2023 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 40 55 63 விதி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.10,000,000.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2002
சீட்டிழுப்பு திகதி : 2023.08.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,750,624/-
வெற்றி இலக்கங்கள் 33 36 39 65 O
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 26 43 48 57 A
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குத் தொடுவாய் மனிதப்புதை குழிக்கு தொல்பொருள் திணைக்களத்தினர் விஜயம்

## 21ம் திகதி அகழ்வுப் பணி



முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுக்கு தொல்பொருள் திணைக் களத்தினர் நேற்று கள விஜயம் மேற்கொண்டுள்ளதோடு எதிர் வரும் 21 ஆம் திகதி அகழ்வுப் பணிக்கும் தீர்மானம் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு -கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை கடந்த இரு நாட்களுக்கு முன் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் எடுத்து கொள்ளப் பட்டு அதில் வழங்கப்பட்ட உத்தர விற்கமைய நேற்று தொல்பொ ருள் திணைக்களத்தினர், சட்ட வைத்திய அதிகாரி அடங்கிய குழுவினர் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.பிரதீபன் தலைமை யில் சம்பவ இடத்திற்கு கள விஜயம் செய்திருந்தனர்.

கள விஜயத்தின் பின்னர் இது தொடர்பாக சட்டத்தரணி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித் துள்ளார்.

நேற்று முல்லைத்தீவு நீதி வான் நீதிமன்றத்தில் மனித புதைகுழி வழக்கு எடுத்து கொள் ளப்பட்டபோது ஏற்கனவே தீர்மா னிக்கப்பட்டதை போன்று சந்தே கத்திற்கிடமான பிரதேசத்தை பார்வையிடுவதற்கு அழைக்கப் பட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் வருகை தந்தார்கள். அத்தோடு முல்லைத்தீவு மாவ ட்ட சட்ட வைத்தியர் வாசுதேவ வும் , வேறு நிறுவனத்தினரும் பிரசன்னமாகியிருந்தனர்.

தொல்பொருள் திணைக் களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு இதற்கான பாதீடும், திட்டமும் ஒரு கிழமைக்குள் நீதிமன்றுக்கு தாக்கல் செய்யப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஆகவே அவர்கள் இந்த மாதம் 17ஆம் திகதி அதற்கான திட்டங்களை தாக்கல் செய்ய இருக்கின்றார்கள்.

அதனை தொடர்ந்து 21ஆம் திகதி இந்த அகழ்வுப் பணி நடை பெற தீர்மானிக்கப்பட்டிருக்கின் றது. அது இந்த மாதம் 17ஆம் திகதி நீதிமன்றில் உறுதிப்படுத் தப படும் என்றார். (ம-7)

## குருந்தூர்...

பாராளுமன்றில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,பொருளாதார வீழ்ச்சிக்கு நாம் முகம் கொடுத்துள்ள நிலை யில், இதனை பயன்படுத்தி தமிழ் அரசியல்வாதிகள் பிரிவினைக்கு முற்படுகிறார்கள்.

குருந்தூர்மலை என்பது வடக் கிலுள்ள பௌத்த மத்தியஸ்தல மாகும். இதனை புராதனச் சின் னமாக அடையாளப்படுத்த நடவ டிக்கை எடுத்தபோது தமிழ் அடிப் படைவாதிகள் இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார்கள். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி அதற்கிணங்க, இந்த செயற் பாடுகளை இடைநிறுத்தியுள் ளார்.

இந்நிலையில் முல்லைத் தீவு, குருந்தூர்மலையில் பொங் கல் நிகழ்வை நடத்த முல்லைத் தீவு நீதிபதி அனுமதி வழங் கியுள்ளார். இந்து அடிப்படை வாதிகளுக்கு நீதிபதி இவ்வாறு தொடர்ந்தும் அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறார். விகாராதிப தியையும் நீதிமன்றுக்கு அழைக் காமல்தான் இவ்வாறான அனு மதிகள் வழங்கப்பட்டுள்ளன. இது பௌத்தர்களின் மனங்களை புண்படுத்தும் செய்ற்பா டாகும்.

இவ்வாறான செயற்பாடுக ளுக்கு எதிராக குரல் கொடுக்கும் நாம் தானா இனவாத- மதவாத பிரச்சினைகளுக்கு காரணம்? அல்லது பௌத்த வழிபாட்டு ஸ்தலம் ஒன்றில் பொங்கல் நிகழ்வை நடத்த அனுமதிவழங் கிய சட்டத்தரணி உள்ளிட்ட நீதிபதியா காரணம் என கேட்க விரும்புகிறேன்.

இந்த செயற்பாடு தொடர்பாக அவதானம் செலுத்தி, உடன டியாக இந்தநிகழ்வை நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளிடம் நான் கேட்டுக் கொள்கிறேன். என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# 13 ஐ அமுலாக்குவதாக ரணில் பூச்சாண்டி

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க இந்த 13ஆம் திருத் தத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக கூறி சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற் றுகின்ற காரியம் அனைத்துமே பூச்சாண்டி காட்டுகின்ற வேலை களாகத் தான் இருக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் தெரி வித்துள்ளார்.

13ஆம் திருத்தம்நடை முறைப் படுத்தப்படும் என்ற பூச்சாண்டி யில் ஏமாற்றப்பட போகின்றவர் கள் தமிழ் மக்களும், தமிழ் பேசும் மக்களும் மட்டும் தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.(ம-7)

## அனைத்து...

ரணில்-விஜேதாச அறிக்கையை கிழித்து எறியுமாறும், EPF, ETF நிதியத்தில் கை வைக்க வேண் டாம் எனவும், தரமற்ற மருந்து களை பயன்படுத்த வேண்டாம், அடிமைத் தொழிலாளர் சட்ட த்தை நீக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தினால் மருதானை பொலிஸ் பிரிவில் முன்னெடுக்கப்படவி ருந்த எதிர்ப்பு பேரணிக்கு தடை விதித்து மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த பேரணியினால் பொது மக்களுக்கு சிரமங்கள் ஏற்படலாம் எனத் தெரிவித்து மருதானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முன்வைத்த விடயங்களை கருத் திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், விகாரமகா தேவி பூங்காவிற்கு அருகில் அனைத்து பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தினர், ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டிருந்தபோது, மற்று மொரு குழுவினர் கிருலப்பனை சந்தியை நோக்கி எதிர்ப்பு பேர ணியை ஆரம்பித்தனர்.

எனினும், இந்த பேரணி மீது இரண்டு சந்தர்ப்பங்களில் நீர்த் தாரை பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

அதனை தொடர்ந்து விகாரமகா தேவி பூங்காவிற்கு அருகில் ஒன்றிணைந்திருந்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தினர் மீது மூன்று சந்தர்ப் பங்களில் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

விகாரமகாதேவி பூங்காவில் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்யும் நோக்கில் பொலி ஸார், கலகத்தடுப்பு பிரிவினர் பின் தொடர்ந்தனர்.

போராட்டத்தை கலைப்பதற்கு இராணுவத்தினர் வரவழைக் கப்பட்டதுடன், போராட்டக்காரர் கள் கொழும்பு பொது நூலக வளாகத்திற்குள் பிரவேசித்த போது பொலிஸார் பலரை கைது செய்தனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநி திகள் சிலர் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்திற்கு முன்பாக மற்றுமொரு ஆர்ப்பாட்டத்தை நேற்று பிற்பகல் ஆரம்பித்தனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு பொலிஸ் கலகத்தடுப்பு பிரிவினர் அழைக்கப்பட்டிருந்த துடன்,நீர்த்தாரை பிரயோக வாக னங்களும் நிறுத்தி வைக் கப்பட் டிருந்தன.பின்னர் ஆர்ப்பாட்டக்கா ரர்கள் கலைந்து சென்றனர்.(ம-7)


விஞ்ஞான ஆசிரியர் தேவை

எழுதுமட்டுவாலில் சேவை நோக்கில் இயங்கும் தனியார் கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் தரம் 6-11 வரையான வகுப்புக்களிற்கு விஞ்ஞான பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
கொடுப்பனவு பேசி தீர்மானிக்கப்படும்
077 279 8192

VILLAGE HOTEL JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/=
(16349)
T.P:077 544 8503

Led video Wall Rent/ Live Streaming
உங்கள் நிகழ்வுகளை நேரடியாகவும் (Live Streaming) பிரமாண்டமான வீடியோ திரையில் (Led Video Screen) காட்சிப்படுத்த அழையுங்கள்
(16661)
075 111 2222

கார் வாடகைக்கு
கிழமை, மாத அடிப்படையில் Altro,Renault கார் வாடகைக்கு உண்டு
(16673)
077 332 2433

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
VISA
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
(C-7050)
Visa Extension
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777

தவறி விட்டது
இல.24,அம்பலவாணர் வீதி,அத்தியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியையுடைய நாகலிங்கம் றோகன் (803405662V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை ,சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் வங்கி அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்.புகையிரத நிலையத்திற்கும் திருநெல்வேலி கல்வியங்காட்டிற்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து
(16677)
077 468 1770

வீடு விற்பனைக்கு
யாழ்.நகரில் உடனடியாக சிறிய வீடு விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவை இல்லை
074 031 0643


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 197, ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org